1291

... 1935. மலர் 12—இதழ் 7.

வருஷ சந்தா ரூ 1-8-0

ஜகன்மோகினி

ஆசிரியை
வை.மு.கோதைநாயகி அம்மாள்.

12 DEC 1935

பொங்கிய காதல் :

அல்லது **மங்களபாரதி**

துப்பறியும் நாவல்

அதிகாரம்

21. காதல் ஊற்று—கலகக் கூத்து.
22. வீராதி வீரனின் கோரமான சம்பவம்.
23. வேதனையின் அம்பு—சோதரியின் அன்பு.
24. மிக மிகத் துயரம்—அகமகிழ் சந்திப்பு.

JL
0024, M22:JM
N35.12.7
182928

...மோகினி" ஆபீஸ்
...டித் தெரு,
...கேணி சென்னை

2

வேலையில்லாத் திண்டாட்டத்தின் அலங்கோலம்.

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் சிறந்த தமிழ் நாவலாசிரியர்களில் ஒருவரெனப் புகழ்பெற்றிருக்கிறார். அவர் இயற்றியுள்ள பல வேறு கற்பனை நாவல்கள் ஏராளமாக ஜனங்களால் இதுவரையில் பயன்படுத்திக்கொள்ளப் பட்டிருக்கின்றன. சமீப வருஷங்களில் அவர் தேச சேவையில் அதிகம் ஈடுபட்டிருக்கிறார். அதன் பயனாகவும் இப்பொழுது தேசத்தில் வேலையில்லாத படித்த வகுப்பினர் படும் பாட்டை அவர் நேரில் கண்டறிந்ததன் பயனாகவும் 'பட்டமோ பட்டம்' என்ற இந்த ஒரு புதிய நாவலை வெளியிட்டிருக்கிறார். இந்த நாவலில் ஆங்காங்கு தமது கற்பனா சக்தியை ஆசிரியர் உபயோகித்து கதையைப் படிப்பதற்கு ரஸமாகச் செய்திருப்பினும், முக்கியமாக படித்த வகுப்பினர் பி. ஏ. எம். ஏ. முதலிய சர்வகலாசாலைப் பட்டங்களைப் பெற்று ஒரு பிழைப்பிற்கும் வழியின்றித் தங்களுக்கும் தங்கள் குடும்பங்களுக்கும் எப்படி வெறுக்கக்கூடிய ஒரு பாரமாக விருக்கின்றனரென்பதை இந்த நாவலில் ஆசிரியர் வெகு அழகாக வருணித்திருக்கிறார். இடையே கவுரவப் பட்டங்களில் மோஹமடைந்து அதற்காகச் சிலர் வீண் பிரயாசை யெடுத்துக்கொள்வதையும் பரிகசித்திருக்கிறார். ஒவ்வோரிடத்தில் கதையின் வரலாறு விஷயங்களை மிகைப்படுத்தும் தோரணையில் இருப்பதாகத் தோன்றக் கூடுமாயினும் வர்த்தமானப் பத்திரிகைகளில் அவ்வப்பொழுது வெளியாகும் சில செய்திகளைக்கொண்டு இக் கதை நேரில் காணுமவற்றை அனுபவித்தே எழுதப்பட் டிருப்பதாக நினைக்கவேண்டியிருக்கிறது. நமது சமூக வாழ்விலுள்ள ஒரு பெரிய துக்கிக்கக்கூடிய குறையை இது வலுவான ரீதியில் ஜனங்களுக்குப் போதிப்பதாகவிருக்கிறது. அத்துடன் படித்த வகுப்பினரும் சாமான்ய கைத்தொழில்களில் ஈடுபடுவதில் எவ்விதத் தாழ்வுமில்லையென்பதை நாவலில் காணப்படும் சில பாத்திரங்களின் வரலாறுகள் மூலம் ஸ்ரீமதி கோதைநாயகி அம்மாள் வற்புறுத்திக் காட்டியிருக்கிறார் அத்துடன் வேலையில்லாத பல படித்த மாணவர்கள் ஒரு சங்கமாகச் சேர்ந்து தங்கள் ஒழுக்கம் நேர்மை மூலம் முன்னுக்கு வருவதாக குறிப்பிடப்பட்டுள்ள விருத்தாந்தம் இத்தகைய கஷ்டமடைந்துள்ளோர் லாபகரமாகப் பின்பற்றக்கூடிய ஒரு யோசனையென் நாம் கருதுகிறோம். கடுமையான ஒரு சமூகக் கஷ்டத்தை முக்கிய ஆதாரமாகக்கொண்டு இக்கதை எழுதப்பட்டிருப்பினும், மற்ற சில சிறந்த நாவல்கள் போல் வாசிப்பதற்கும் ரஸமாகவிருக்குமாறு இது இயற்றப்பட்டிருக்கிறது. (சுதேசமித்திரன் 1-6-35)

விலை அணு **10** சந்தா நேயர்களுக்கு அணு **8**

சுகுண பூஷணம் :: அல்லது **அற்ப புத்தியின் அவதி**

எனும் ஸ்வாரஸ்யமான நாவல்

விற்பனைக்குத் தயார் — விலை அணு 4.

12 அணு முன்பண மனுப்பித் தபாற் செலவின்றி
2 நாவல்களையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

"ஜகன்மோகினி" ஆபீஸ்.

26, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

21-வது அதிகாரம்

காதல் ஊற்று—கலகக் கூத்து

12 DEC 197

உலகத்தில் மக்களைத் தன் வயப்படுத்திக் கொள்வதும், ஆநந்தமயமாக்குவதும், தன்னை மீறிய ஓர் உணர்ச்சியை, சக்தியைக் கொடுப்பதும் எல்லோரும் தன்னைப் போற்றி நம்பும்படிக்குச் செய்வதும் சிறந்த வல்லமை வாய்ந்த பரிசுத்தமான அன்பு ஒன்றேயல்லவா! அத்தகைய அன்பிற்கு அடிமையாகாத மக்கள் உலகில் யாரிருக்கின்றார்கள்?

நமது உத்தம வாலிபனான ராஜசேகரன் பரிசுத்தமான, பரிபூரணமான அன்பினாலேயே கவரப்பட்டுத் தன்னாருயிர்க் காதலியைக் காண வந்த தருணம் எல்லா மாணவிகளும் ஒன்றுகூடி கடவுளைப் பிரார்த்தனை செய்யும் பேராநந்தத்தைக் கண்டு மெய் சிலிர்த்தபடியே நின்று தன்னையே மறந்தான். "நானும் ஓர் பெண்ணாகப் பிறந்திருந்தால் இந்த ஆநந்த கோஷ்டியில் கலந்துகொள்ளும் பாக்கியம் பெற்றிருக்கலாமே! என்னை மேன்மையான புருஷ ஜென்மம் எடுக்கச் செய்தும் எனக்கு ஓயாத மனக் கவலையை அளித்து விட்டாயே!

132978

என்னை விட்டு என் தாயார் இறந்த விசனத்தையும் சகித்தேன். ஆனால் என் கையினால் பந்தை எறிந்து அதன் மூலம் ஒரு வீர வாலிபன் அனியாயமாகிவிடவும், அவன் தாயார் இறக்கவும், சகோதரி திக்கற்றுத் தவிக்கவும் செய்தேன்! சீச்சீ! என்ன பரிதாபம்! இதை நினைத்தால் என்னால் தாங்க முடியவில்லையே! அந்த பாபந்தான் என்னை வளர்த்தவர்களே பிரஷ்டமாக்கவும், பெற்ற அப்பன் எதிரியாகவும் செய்து விட்டது."

என்று தனக்குள் பழங் கதைகளை நினைத்துக் கண்ணீர் சிந்திக் கொண்டிருக்கையில், பூஜா மண்டபத்தில் தலைவி சொர்ணம்பாள் கற்பூரஹாரத்தி எடுக்கிருள்.மாணவிகள் எல்லோரும் எழுந்து நின்று தோத்திரப் பாடல் பாடி கை குவித்து நிற்கும் காட்சியைக் கண்ட ராஜசேகரன் தானும் சாளரத்தின் வழியாகக் கடவுளை வணங்கினன். பூஜையும் முடிவு பெற்றது. மாணவிகள் சிட்டுக் குருவிகள் போலப் பறந்து தம்தம் இருப்பிடங்களுக்குச் சென்றார்கள்.

தலைவி சொர்ணம்பாள் மட்டும் பகவத்கீதையை தன் போக் காகப் படித்துக்கொண்டிருந்தாள். அச் சமயம் வீதியிலிருக்கும் ராஜன் தன் வரவை வேலைக்காரன் மூலம் சொல்லியனுப்பினன். உடனே சொர்ணம்பாள் மிக்க சந்தோஷத்துடன் வெளியில் வந்து ராஜசேகரனைப் பார்த்து விசாரித்து உள்ளே வரும்படி அழைத்தாள்.

ராஜசேகரன் தலைவிக்கு வணங்கி மரியாதை செய்தான். வெளி யார் வந்தால் உட்காருவதற்கென்று இருக்கும் அறையில் ராஜசேக ரனைத் தலைவி யழைத்துச் சென்று அமரச் செய்தாள். ராஜனின் மெலிந்த மேனியைக் கண்ட தலைவி, "நண்பரே! தங்கள் உடல் நலம் எங்ஙனமிருக்கிறது? மிகவும் இளைத்துத் துரும்புபோலிருப்பதாகத் தெரிகின்றதே!" என்று கேட்டாள்.

ராஜன்—தாயே! தங்களுடைய ஆசீர்வாதத்தினுல் சற்று குண மென்றே நினைக்கிறேன். என்னென்ன விபத்துக்கள் வந்தாலும் அவைகளை அனுபவித்துத்தானே தீரவேண்டும். என்னுடைய நிலை மையில் டாக்டர் இன்னும் வெளியில் போகக்கூடாதென்றுதான் கட்டளையிட்டார். என்றாலும் எனது தேக நோய்க்கு மருந்து கொடுக்கும் முறையில் அதை அனுட்டிக்கவேண்டியது உண்மையே! மனேவியாதிக்கு மருந்து கொடுக்கும் வைத்தியரின் தயவு கிடைத்த உடனே அதையும் நான் சாப்பிட முந்த வேண்டியதல்லவா! அதனுல் வந்துவிட்டேன். தாங்கள் எடுத்துக்கொண்ட இந்த பேருத விக்கு எவ்விதம் நன்றி செலுத்துவதென்று தெரியவில்லை.

சொர்ணம்பாள்—இதெல்லாம் வேண்டாம். நான் என்ன மகா

உபகாரம் செய்துவிட்டேன்! அதொன்றுமில்லை. நான் இவ் விஷயத்தில் ஆசிரமத்து விதிப்படிக்கு ப்ரவேசிக்கக் கூடாதென்பதை யறிந்தும் மகா பாவியாகிய நான் இம்மாதிரி சம்பவத்தில் உயிர்களைப் பலி கொடுத்து நொந்த மனத்தினளாகையினால் இதைச் செய்தேன் என்று கூறி தன்னுடைய ஜெயமணியின் விவரங்களை எல்லாம் கூறினாள்.

ராஜ:—அம்மணீ! தங்களுடைய விதிக்கு விலக்காக நீங்கள் இவ்விதம் செய்வதால் ஏதேனும் ஆபத்து விளையுமாயின் அது மிக்க கஷ்டமாயிற்றே! எனக்கு பாரதியின் விவரம் தெரிவித்ததோடு நின்றிருந்தாலும் போதுமே.

தலைவி:—நானும் ஜாக்ரதையாகத்தான் செய்திருக்கிறேன். பாரதியின் நிலைமையைக் கண்டால் தெரியும். கேவலம் துரும்பென மெலிந்து போய்விட்டாள். நான் அவளைப்பற்றி பின்னும் கவனிக்காதிருப்பேனேயானால் இந்த ரகஸியம் மற்ற மாணவிகளுக்கெல்லாம் தெரிந்துவிடும். அதனால் அவர்கள் மனதும் சஞ்சலமோ சபலமோ அடையலாம். அல்லது ஆத்திரமோ வெறுப்போ கொண்டு என் மீது அவநம்பிக்கைப்படலாம். அதனால் ஆசிரமத்தின் கொள்கைகளுக்கும் நடவடிக்கைகளுக்கும் ஏதேனும் களங்கம் நேரலாம். இதுபோன்ற பல விஷயங்களை ஆலோசனை செய்து தான் இதை யொரு வழியாக்கி ரகஸியமாக விட்டு விடுவது நலம் என்று தோன்றியதால் இவ்விதம் செய்தேன். மேலும் பாரதியின் நிலைமையில் அவளுக்கு நான் ஒரு வழி செய்யாதிருப்பேனே யானால் என் ஜெயமணியைப் போல ப்ராண பயந்தான் நேரும் என்ற பயமும் உண்டாகிவிட்டதால் நான் துணிந்தேன். மேலும் ஆசிரம விதிகளிலும் இதற்கு ஆதார மிருக்கிறது. இதோ பாரதியைக் கூப்பிடுகிறேன்." என்று கூறி ஓர் விசையை அழுத்தினாள்.

உடனே ஒரு வேலைக்காரி ஓடி வந்தாள். பாரதியை அழைத்துக்கொண்டு வரும்படிக்குக் கூறினாள். ராஜசேகரன் தான் எதிர் பார்த்து ஏங்கிக் கொண்டிருந்த தன்னருமைக் கண்மணி பாரதியைப் பார்க்கப் போகும் பெருமையில் ஆநந்தப்பட்டுக்கொண்டிருந்

தான். அதே சமயம் அந்த ஆசிரமத்தின் விசேஷ கவனிப்பாளர் (மானேஜர்) திடும்பிரவேசமாக அங்கு வந்தார்.

அந்த குரலைக் கேட்ட உடனே தலைவி சொர்ணம்பாள் நடு நடுநடுங்கி அலறிவிட்டாள். ராஜசேகரனை நோக்கி "ஐயா! எங்கள் அதிகாரி வந்திருக்கிறார். நீர் தயவு செய்து பதில் பேசாமல் போய் விடும். பிறகு நான் பார்த்துக்கொள்கிறேன். மாலை 5 மணிக்கு மேல் இங்கு யாரும் ஆடவர்களே வரக்கூடாது. நீர் இதோ இந்தப் பக்கத்து வழியால் சென்றுவிடும் என்று பதைபதைத்துக் கூறினாள்.

ஆனந்தக் கோட்டை கட்டிக்கொண்டு அகமகிழ்ந்திருக்கும் ராஜசேகரனுக்கு இந்த வார்த்தையைக் கேட்டதும் திடுக்கிட்டது. ஒரு விநாடி நேரம் பதில் பேசமாட்டாது கலங்கி நின்றான்.... அடுத்த நிமிடம் தன் சுய புத்தியை அடைந்து ஆசிரமத்தின் விதியையும் தலைவியின் நிலைமையையும் உணர்ந்து பதில் பேசாது தலைவி காட்டிய வழியே எழுந்து செல்ல எத்தனித்துத் தலைவிக்கு வந்தனம் செய்தான்.

"ஆமாம்! ஆமாம்! பெயரளவில் தடபுடல் புகழ் மாலைதான். செய்கையில் இத்தகைய ஊழல் மாலைகள் குவிந்து கிடக்கின்றன. இதோ இவன்தான் காமுவென்ற பெண்ணைக் கெடுத்து அவளை இழுத்துக்கொண்டு போகும்பொருட்டு ரகஸியமான ஏற்பாடுகளைச் செய்திருந்து அவளைக் காப்பாற்றுவது போல நடித்து வீட்டிற்குக் கூட்டிச் சென்றான். இதில் முக்கியமான விசேஷமென்ன வெனில் கிழவியைக் கொன்ற ஆசாமி இவன்தான் என்பதைக் கவனியுங்கள்.

கொன்றது தெரியாதிருக்கும் பொருட்டு ஏதேதோ சூழ்ச்சி செய்திருக்கிறார்கள். இந்த சிக்கலான வழக்கில் இவன் சம்மந்தப் பட்டவன். அதோடு விடாது ஆசிரமத்திலும் பிரவேசித்துவிட்டான்.'' என்று ஒரு மனிதன் உபதேசித்துக்கொண்டே வருகிறான். அவனுடன் அதை ஊங் கொட்டிக்கொண்டே மானேஜர் வருகிறார். இருவரும் உள்ளே ஒரே சமயத்தில் நுழைந்தார்கள்.

ராஜசேகரன் செல்வதைக் கண்ட மானேஜர் "ஐயா! தயவு

செய்து நில்லும். போகவேண்டாம். உமது பிரக்யாதிகள் முழுதும் நான் தெரிந்து கொண்டாயிற்று. உம்மைப் போன்ற தீர வீர உத்தம புருஷர்கள் தெருவோடு செல்வதற்கு யோக்யதையேயன்றி இந்த ஆசிரமங்களில் கால் வைக்கவும் யோக்கியதையில்லை. இங்கு யாரை இழுத்துச் செல்லவோ, அன்றி கொலைக்குடைந்தையாயிருக்கவோ வந்தீர்?......

அம்மா! சொர்ணம்பாள்! பதில் பேசாது எழுந்து வெளியே செல்லலாம். ஆசிரமத்தை நடத்த, நிர்வகிக்க சக்தி இல்லை எனில் மரியாதையாக விலகிக்கொண்டிருந்தால் நல்லதாக விருக்கும். கவுரவமாக ஏழைப் பெண்களைக் கல்வி போதனையுடன் சன்மார்க்கத்தில் கட்டிக் காக்கும் தலைவி என்கிற பெயரை வைத்துக்கொண்டு இம்மாதிரி காரியம் செய்வது அழகல்ல. இது தலைவி முறைக்கு ஹானி விளைவிப்பதும் அவமானத்தை யுண்டாக்குவதுமாகும்.

ஓர் கட்டுப்பாடான ஆசிரமமென்றால் அதன் விதிகளினின்று சிறிதும் வழுவாது இன்னும் அதிகமாய் அனுபவத்தில் காட்டக்கூடிய நீதிகளைப் போதித்து மாணவிகளை ஒழுக்கத்துடன் முன்னேறச் செய்யவேண்டிய கடமையை விட்டு இத்தகைய தூர்த்தர்களின் சகவாஸத்தைக் கொண்டு இந்த ஆசிரமத்தை நாசமாக்கவா எண்ணுகிறீர்கள்? போதும் போதும். உங்கள் அற்புதமான போதனைகள் போதும். இனி இக்ஷணமே வெளியேறலாம்.'' என்று சற்றும் தாக்ஷண்யமின்றிக் கடிந்து பேசினர்.

திடீரென்று மண்டையில் பலமாக ஓங்கி யடித்தது போன்று பேசிய இம் மொழிகளைக் கேட்ட ராஜசேகரனுக்கும் சொர்ணம்பாளுக்கும் தலை கிறு கிறு என்று ஆடியது. கண்கள் குபீரென்று இருண்டு ஓரே அந்தகாரமாகி விட்டன. பதில் பேசவும் தெரியவில்லை. தேகம் முற்றும் அக்னி ஜ்வாலையாக எரிகின்றது. இந்நிலைமையில் தத்தளித்தபடியே ராஜசேகரன் மானேஜரின் அருகில் சென்று "ஐயா! அவசரப்படாதீர்கள். தாங்கள் யாரையோ ஆள்மாறுட்டமாகச் சொல்கிறீர்கள் என்று நினைக்கின்றேன். சற்று யோசித்து நிதானமாகப் பேசுங்கள்'' என்று வணக்கமாகக் சொன்னான்.

இதைக் கேட்ட அம்மனிதன்...உம்...உம்மை நான் ஆள் மாருட்டமாகப் பேசவில்லை. கிரிக்கெட்டு சாம்பியன் என்று ப்ரசித்தி பெற்ற இராஜசேகரனவர்கள்தான் என்று எனக்குத் தெரியும். பந்தாட்டத்தில் பெற்ற புகழை விடத் தற்போது அபாரமான பெரும் புகழ் பெற்றிருப்பதையும் அறிந்துதான் பேசினேன். ஐயா! பந்தாட்டத்தின் ஓர் மகிமையை உத்தேசித்து இச்சமயம் உம்மை நான் இவ்விடத்திலிருந்து வெறுமை மரியாதையாக வெளியேறச் செய்கிறேன். இல்லையேல் போலீஸார் உம்மைத் தேடாமலேயே உம்மை யவர்களிடம் ஒப்புவிப்பேன். ஊம்...நடவும்'' என்ருன்.

கண்ணீர் ஆருய்ப் பெருகியவாறு சொர்ணம்பாள் "எஜமானே! இம்மாதிரியான தப்பபிப்ராயம் தாங்கள் கொள்வது சரியல்ல. நான் ஒருவிதமான குற்றமும் செய்யவில்லை. தாங்கள் திடீரென்று இவ்விதம் பேசுவது என் இதயத்தைப் பிளக்கின்றது. தாங்கள்......

மானேஜர்:—...சரி போதும் லெக்சர்! இதுவரையில் நடத்திய திடன் முடிவு பெறட்டும். வெளியே இக்ஷணமே போகலாம்— என்று மேலும் ஏதேதோ துடுக்காகப் பேசினர். இதற்குள் இச்செய்தி காட்டுத் தீயைப்போல ஆசிரமம் முழுவதும் பரவிவிட்டது. மாணவிகள் எல்லோருக்கும் திடுக்கிட்டுக் கலங்கிவிட்டது. அவர்கள் தத்தளிக்கின்றார்கள். தலைவியின் உயர்ந்த குணமும் போதனையும் அவளுடைய நடத்தையும் மாணவிகளிடத்தில் வெகு பக்ஷமாகவிருக்கும் தன்மையும் ஒன்றுகூடி அவர்களுக்குத் தலைவியினிடத்தில் அபாரமான பயபக்தியும், நன்மதிப்பும், விசுவாசமும் தானே உண்டாகி விருத்தி யாகிவிட்டன.

ஆதலால் இம்மாதிரி தலைவியின் மீது பழி சுமத்தி மானேஜரே பேசும் சூடான வார்த்தைகள் அவர்களுடைய மனத்தைத் துளைத்தன. கண்களில் ஜலம் தாரை தாரையாக உதிர்ந்தது. மார்பு படபடவென்று அடித்துக் கொள்கிறது. இந்நிலைமையில் எல்லா மாணவிகளும் அந்த மானேஜர் புலி முன்பு வருவதற்குப் பயந்து நடுங்கியபடியே விவரமறிந்தோரும் அறியாதோரும் தத்தளித்து நிற்கிருர்கள்.

இக் கூட்டத்து மத்தியில் நிற்கும் நமது அருங் குண மணி யாகிய பாரதிக்கு முதலில் ஏதோ தலைவியின்மீது புகார் நடப்ப தென்பதை யறிந்த உடனே தூக்கி வாரிப் போட்டது. தனக்கு அவள் உதவி புரிந்த விஷயம் வெளியாகி விட்டதோ! அதனால் ஏதே னும் ஆபத்து நேர்ந்துவிட்டதோ என்று திடுதிடுத்தவாறு தூர இருந்து எட்டிப் பார்த்தாள்.

அந்த சமயந்தான் ராஜசேகரனை மானேஜர் துடுக்காகப் பேசு வதைப் பார்த்தாள். அப்படியே தம்பித்து ப்ரமித்துப்போய் "ஹா... அதோ என்னுருயிர்க் காதலர்...என் ராஜசேகரன்...என் அன்பா ரமுதன்" என்று தனக்குள் இத்தனைக் கவலைக்கு மத்தியில் ஒரு சிறிது ஆனந்தங் கொண்டாள். அடுத்த வினாடியே தனக்கு நேரப்போகும் அதி பயங்கரமான காட்சியின் தோற்றம் எதிரில் வந்து காட்சி கொடுத்தது. உடனே அவளுடைய நிலைமையே மாறியது. தலைவியும் அதிகாரி மானேஜரும் எதிரில் இருக்கையில் தான் சென்று பேசவும் ராஜசேகரனை விசாரிக்கவும் மிக்க பயமாகிவிட்டது. மனமோ தத்த ளிக்கின்றது.

இன்னிலைமையில் பாரதி சரேலென்று மிக்க துணிபு கொண்டு தன் தலைவி தனக்கு எழுதியதும், தலைவிக்கு ராஜன் எழுதியதுமான சகல கடிதத்தையும் துண்டு சுக்கலாகக் கிழித்தெறிந்துவிட்டு தலைவி யின் அறையிலும் தைரியமாகச் சென்று, தான் தலைவிக்கு எழுதிய கடிதத்தையும் கிழித்தெறிந்துவிட்டு ஓடிவந்தாள்.

இதற்குள் தலைவி சொர்ணம்பாள் மனந் தவித்தவாறு "ஐயா! தாங்கள் என்னை வெளியே போகச் சொல்வதற்கும் நான் போவதற் கும் பாத்யதை சிறிது உண்டு எனினும் தாங்கள் கேவலம் அபாண் டப் பழியைச் சுமத்தி என்னை விரட்டுவது சிறிதும் தகாது. இந்த சந்தர்ப்பத்தில் இச் சிக்கலான விஷயத்தில் தீர்மானங் கூறக் கூடிய வர்களில் இவ்வாசிரமத்தின் சொந்தக்காரருக்குத்தான் அதிகமான பாத்யதை உண்டு என்பதை ஞாபக மூட்டுகின்றேன். தாங்கள் அனியாயமாகக் கூறுகின்றது போல ஒருவிதமான களங்கமும் இந்த

வீர புருஷனிடத்திலோ என்னிடத்திலோ இல்லை என்பதைக் கடவுள் மீதாணையாகக் கூறுகிறேன்.

ஆசிரமத்தின் விதிகளைத் தாங்கள் நன்ருகப் படிக்கவில்லை என்றே, படித்துத்தான் மறந்து விட்டீர்களென்றே நினைக்கிறேன். இதோ ஆசிரமத்து விதிகளைப் படித்துப் பாரும்'' என்று வெகு தைரியத்துடன் கூறியவாறு ஒரு புத்தகத்தை எடுத்து வந்தாள்.

தலைவியின் தைரிய மொழிகளையும் தன்னைப்பற்றி சிறிது அலக்ஷியமாகக் கூறியதையுங் கேட்ட மானேஜரின் கோபம் தலைக்கேறிவிட்டது. அவர் வெகு ஆத்திரத்துடன் அந்த புத்தகத்தைப் பிடுங்கி எறிந்துவிட்டு "ஓகோ! நூல் படிக்கத் தெரியாத முண்டமென்று என்னை நினைத்து எனக்கு சற்று போதிக்க வந்துவிட்டீர்களா? பேஷ்: பேஷ். போதும் போதனையின் திறமை. வெளியே போகலாம். இப்போதே சென்றால் மரியாதையுடன் செல்லலாம். இல்லையேல் விபரீதத்துடன் தான் போகும்படிக்கு நேரும்'' என்று கூசாது கூறினர்.

இம் மொழியைக் கேட்ட தலைவிக்கு கோபமும் வேதனையும் அதிகரித்தன. "ஐயா! உம்முடைய அட்டகாஸத்தை நீர் செலுத்தும். என்னுடைய கடமையையும் நான் விடாது செய்து, தங்களுடைய வீண் ஆடம்பரத்தின் ரகஸியத்தையும் கட்டாயம் வெளியிடுகிறேன். தாங்கள் என்னை விரட்டியதோடு ஜெயம் பெற்றுவிட்டதாக நினைக்கவேண்டாம். இதோடு தங்களுடைய அதிகாரம் முடிந்ததென்றே எண்ணும்......

என்னருமை மாணவிகளே! நான் உங்களுடன் சந்தோஷமாக இருப்பதற்கு இதுவரையில் பாக்கியம் செய்திருந்தேன். இனியும் இம்மாதிரியான பாக்யம் கிடைக்குமென்றுதான் நம்புகிறேன். ஈசனின் திருவுள்ளமெப்படியோ தெரியாது. நான் போய் வருகிறேன். என் மனப்பூர்வமான ஆசீர்வாதம் உங்களுக்கு அளிக்கின்றேன்....பாரதீ! நீயும் புறப்படு. வா போகலாம். ஆசிரமத்து வாழ்க்கை உனக்கு இதோடு முடிவு பெற்றதென்று நினைத்துக் கொள்ளு. அதோ புத்தகத்தில் கையெழுத்திட்டு விட்டு வா:'' என்றாள்.

இதைக் கேட்ட மானேஜர் "ஓகோ! இன்னும் தலைவி யதிகார ஒதாவில் இருக்கிற எண்ணமோ! அந்தப் பெண்ணை அழைத்துச் செல்ல உங்களுக்கு இனி அதிகாரமில்லை. மேலும் ஆசிரமத்து விதியில் "நான் ஒரு வருடத்திற்கு இங்கு தங்கள் ஆதீனத்தி லிருப்பேன். அதன் மத்தியில் நான் அவசியமாகச் செல்லவேண்டி நேர்ந்தால் நான் இதன் காரியதரிசியினிடம் உத்திரவு பெற்றுக்கொண்டு செல்கிறேன். ஒரு வருடம் சென்றும் நான் இருக்கப் பிரியப்பட்டால் இங்கு இருப்பேன்." என்று எழுதிக் கொடுத்திருப்பதை மறந்துவிட்டீர்களா! இந்த ஒரு வருடத்திற்கு இவள் இங்கு இருக்கக் கட்டுப்பட்டிருக்கிறாள். இப்பொழுது இதை விட்டுப் போவதற்கு யாதொரு அதிகாரமும் இல்லை. அவசியமான போது எஜமானருடைய உத்திரவின்படி அவளை யனுப்பத் தெரியும்......என்று படபடத்துக் கூறினர்.

மாணவிகளெல்லோரும் தலைவியின் திடீரென்ற பிரிவுக்காகக் கண்ணீர் விட்டுக் கலங்குகின்றார்கள். கையைக் குவித்துத் தங்களுடைய விசனத்தையும் பக்தியையும் காட்டி வந்தனம் செய்தார்கள். அபலைப் பெண்கள்—திக்கற்ற பெண்கள்—ஏழைப்பெண்கள் அதற்கு மேல் என்ன செய்ய முடியும் பாவம்! இந்தப் பெண்கள் மத்தியில் தாமரையிலைத் தண்ணீர் போலத் தத்தளிக்கும் நமது செல்வி பாரதியின் மன வேதனையைக் கூற முடியுமா!

அவளுடைய அப்போதிய நிலைமையில் தன்னால் தன் தலைவிக்கும் தன் காதலனுக்கும் ஏதோ ஆபத்து வந்துவிட்டதே என்ற பெருத்த திகில் பிடித்து மனத்தை வாட்டுகின்றது. அவள் தன்னை மீறிய நிலைமையோடு ஆவேசங் கொண்டவளைப்போல ஓடி வந்து தன் னுருயிர்க் காதலன் ராஜசேகரனின் கால்களைப் பிடித்துக்கொண்டு "என்னால் தங்களுக்கு"...என்று கூற வாயெடுத்தாள்.

இதற்குள் ராஜசேகரன் பாரதியின் கருத்தை யொரு நொடியில் தெரிந்துகொண்டான். அன்பின் ஆழத்தை யாரேயறியவல்லார்! வேரூன்றிப் பாய்ந்து விட்ட களங்கமற்ற காதலின் தன்மையை—மகிமையை—அளவிட்டுக் கூற முடியுமா! அபாரமாகப் பொங்கும்

காதலுக்கு முன்னல் ராஜசேகரன் துக்கம், வெட்கம் இரண்டையும் மறந்தான். தன்னெதிரில் மண்டியிட்டுக் கிடக்கும் தன் காதல் தேவதையை வாரித் தூக்கி ஆகாயவாணி, பூமிதேவி சாக்ஷியாக அன்றுதான் அவளைத் தன் அங்கமுறத் தழுவிக் கட்டியணைத்துக் காதல் மிகுந்த கண்ணீரை உதிர்த்தான்.

"கண்மணீ! என் இன்ப நிலையமே! பாரதீ! அஞ்சாதே; அஞ்சாதே! உன்னுடைய கருத்தை யறிந்தேன். உன் அன்பின் ஆழத்தையும் அறிவேன். ஈசன் ஒருவன் இருக்கிறுன். நமக்குள் அவனுல் அளிக்கப்பட்டுள்ள தூல்லியமான கரை புரண்டு பொங்கி வரும் காதலை அவன் சிதைத்து நம்மை வதைத்துப் புவியில் புதைத்து விடமாட்டான். பொறுத்தார் பூமி யாள்வார் என்ற வாக்கை மறக்காதே

கண்ணின் கருமணியே! காதல் நவமணியே! நானே சுத்த வீரனுயும், களங்கமற்ற ஹ்ருதயத்துடன் கடவுளை வழிபடுபவனுயும் இருந்தால் இந்த ஆசிரமத்தின் தலைவியாகிய இந்த அம்மாளே இவ்வாசிரமத்தில் என்றும் தலைமுறைத் தத்துவமாக தலைவியாக இருக்கும்படிக்குச் செய்து என்மீதுள்ள படாத; பழியையும் களைந்துகொண்டு இங்கு தற்போது அதிகாரம் செய்யும் பெரிய மனிதரின் நியாய திட்டத்தையும் விளக்கிக் காட்டி உன்னையும் இவ்வாசிரமத்தின் விதிப்படிக்கு இவ்விடத்திலேயே மணந்துகொண்டு சந்தோஷமாக இருக்கச் செய்கிறேன். கவலைப்படாதே.

காதல் கண்ணே! அம்மாதிரி நான் கூறியதில் ஏதேனும் கொஞ்சம் தவறி தோல்வி யடையுமாயின் நான் இந்த பெரிய மனிதருக்கு அடிமையாவதோடு உன்னையும் அடிமையாக்கி விடுகிறேன். இது நிச்சயம். இதனுல் எனக்கு என்ன வாகியபோதிலும் பாதகமில்லை. கண்ணே! கலங்காதே: கண்ணீர் விடாதே: மனத்தைத் தேற்றிக் கொள்ளு" என்று ஒரு நிமிடத்திற்குள் கலகலவென்று வார்த்தைகளைக் கூறிவிட்டு பாரதியைத் தன் அணைப்பிலிருந்து விட்டுவிட்டு அந்த மேனேஜரையும் மற்றவனையும் ஒரு முறைப்பு முறைத்து விட்டுச் சரேலென்று போய்விட்டான்.

காதலர்களின் அன்யோன்ய அன்பைக் கண்டால் யார்தான்

வியப்புறமாட்டார்கள். பாரதியின் ரகஸியத்தை இன்றே புதிதாகக் கண்ட மற்ற மாணவிகள் வியப்புக் கடலில் மூழ்கிவிட்டார்கள். மானேஜரும் மற்றவனும் இவர்களைத் தடுத்து விரட்ட வேண்டு மென்று நினைத்தார்கள் எனினும் அந்த நிமிடத்தில் இந்த அற்புதக் காட்சியைக் கண்டு ப்ரமித்து நின்றார்கள். அதற்குள் மேற் குறித்த வார்த்தைகள் முடிவுற்று ராஜனும் போய்விட்டான்.

அப்போதே தமது க்ரூர உணர்வைப் பெற்ற மானேஜர் விழித்துக்கொண்டு ஓடுவதற்குள் ராஜனே போய்விட்டான். காம்பொடிந்த தாமரையைப் போல பாரதி ராஜன் சென்ற திக்கையே நோக்கிக் கண்ணீர் வடிய சித்தப் பிரமை கொண்டவள் போல நின்றுவிட்டாள். தலைவியும் கண்ணீர் வடிய ஆசிரமத்தை விட்டுப் போய்விட்டாள். ஆசிரமமே அல்லகல்லோல மாகிவிட்டது.

22-வது அதிகாரம்

வீராதி வீரனின் கோரமான சம்பவம்

உலகத்தில் எந்த மனிதர்களுக்கும் தாம் எடுத்த காரியங்கள் ஜெயித்துவிட்டாலும் அல்லது தோற்றுவிட்டாலும் அவ்வப்போது அதனதன் பலனுக்கேற்றவாறு உத்ஸாகமும், தைரியமும், மனச் சோர்வும், பீதியும், கைகூடாமையினால் ஏற்படும் மனக் கொதிப்பும், ஆத்திரமும், அவமானமும், அதைரியமும், பலவிதமான உணர்ச்சிகள் வந்து நிர்த்தனம் செய்வது சகஜம். அக்காலையில் மக்கள் இன்பமும் துன்பமும் அனுபவிப்பதும் சகஜம்.

அதே போன்று நமது நாயுடுகாருவைப் பார்த்த மனிதனின் மன நிலைமையின் தவிப்பும், நாயுடுவின் மன நிலைமையின் உத்ஸாகக் கொந்தளிப்பும் அம்புஜாவின் நிலைமையும் விநோதமாக விருக்கிறது.

நாயுடு அம் மனிதனைப் பார்த்து "ஐயா! ஏன் தேகம் முற்றும் நடுங்கு கின்றது. பயமா! ஐயோ! பாவம். பயந்து நடுங்கக்கூடிய மனிதன இத்தகைய காரியத்திற்கு உடன்பட்டீர்கள்? சரி. அது கிடக்கட்டும் இப்போது நான் கேட்கும் கேள்விகளுக்குச் சரியான ஜவாப்பு சொல்கிறீரா இல்லையா!.........ஏன் விழிக்கிறீர்......பயப்படாமல் சொல்லும்...உம்முடைய பெயர் வீரப்பன்தானே...என்று கேட்ட தும், அம்மனிதனின் சரீரமே நடுங்கியது. முன்னிலும் பதின்மடங்கு அதிகரித்த வேதனையுடன் தத்தளித்தான்.

நாயுடு.—வீரப்பா! நடுங்காதே; விழிக்காதே. சரியானபடி பதில் சொன்னால் நீ தப்பி விடலாம். இல்லையேல் நீயும் அதோகதி யாய் விடுவாய். உன் பெற்றோர்கள் உன்னால் படுந்துன்பத்தை நீ சிறிதும் அறியாமல் துள்ளுகிறாய். உம்...தலை கவிழாதே...நிமிர்ந்து பாரு...நீ சிறைச்சாலையிலிருந்து எவ்வாறு தப்பியோடினாய்? அந்த தகவலைக் கூறு.

வீரப்பன்.—(நாத்தடுமாறத் தேகம் நடுங்கியவாறு, "நாயுடுகாரு! ......நான்...நான்...குற்ற...வா......ளி......நாயுடுகாரு......

நாயுடு.—அடேய்! கேட்டதற்கு பதில் சொல்லு. உன்னுடைய சகல விஷயங்களையும் நான் துப்பு துலக்கி வைத்திருக்கிறேன். இருந் தாலும் நீ விவரத்தைக் கூறு. பிறகு நான் உன்னைத் தப்புவிக்கும் வழியைத் தேடுகிறேன்.

வீரப்—நாயுடுகாரு! நான் அந்த நரசோர வழக்கில் சம்மந்தப் படாதிருக்கையிலேயே சம்மந்தப்பட்டதாக என்னை தண்டித்துச் சிறைக்கு அனுப்பிவிட்ட பிறகு என்னுடைய மனம் பட்ட பாட்டைக் கூறத் திறமன்று. அச் சமயம் அதே ஜெயிலுக்கு வேறு ஏதோ குற்றத்திற்காக சில நபர்கள் வந்தார்கள். அவர்களைப் பார்ப் பதற்கு பொன்னுசாமி என்கிற ஒருவன் சில தினங்கள் வந்தான்.

அந்த கூட்டத்துடன் நான் வெகு பழக்கமாகிவிட்டேன். அந்த பொன்னுசாமி எங்களுக்கு வெகு ரகஸியமாக தப்பித்துக் கொள்ளும் வழியைக் கற்றுக் கொடுத்தான். இதற்கு ஒரு வார்ட

ரின் உதவியை நாடி அவனுக்கு ஏதோ லஞ்சங் கொடுத்து அவனைக் கைக்குள்ளே போட்டுக்கொண்டான்.

வார்டர்கள் எல்லோருமே லஞ்ச தேவதைக்கு அடிமையானவர்களல்ல. அவர்களில் சத்தியமாயும், யோக்கியர்களாயும் இருப்பவர்கள் எத்தனையோ பெயர்கள் உண்டு. சில அல்ப குணம் படைத்தவர்கள்தான் இத்தகைய காரியத்தில் சிக்கிக்கொண்டு அவதிப் படுகிறார்கள். அந்த கூட்டத்தில் சேர்ந்த மூவர் ஒன்றுகூடி இந்த காரியத்திற்கு இசைந்தார்கள். மூவருக்கும் பொன்னுசாமி பணமாகத் தரவில்லை. அவர்கள் பெண்டாட்டிகளைத் தனக்கு அறிமுகப் படுத்திக்கொண்டு அவர்களுக்கு வேண்டிய நகைகள், புடவைகள் முதலியனவும் சிறிது பணமாயும் கொடுத்து அவர்கள் மூலம் வார்டர்களையும் வசமாக்கிக்கொண்டான்.

வார்டர் ஒரு தினம் எங்களை உஷார் படுத்திவிட்டு நாங்கள் தப்பித்துக்கொள்ளும் வழிகளை எல்லாங் கூறிவிட்டான். நாங்கள் வெகு பந்தோபஸ்துடன் வெளியில் தோட்ட வேலை பார்க்கச் சென்றோம். அத் தோட்டத்திற்குப் பக்கத்தில் ஓர் பெரிய சவுக்குத் தோப்பு இருக்கிறது. அந்த சவுக்குத் தோப்பில் ப்ரம்மாண்டமான துறவு ஒன்று இருக்கிறது. அந்த வார்டர் சொல்லிக்கொடுத்த படிக்கு இரண்டு வார்டர்களையும் ஒரு மரத்தோடு பிணைத்துக் கட்டிவிட்டு அந்த சவுக்குத் தோப்பில் புகுந்து துறவுக்குள் இறங்கி ஒளிந்து கொண்டோம்.

இரவு வரையில் அந்த துறவுக்குள்ளேயே இருந்தோம். இதற்குள் பலர் தேடிக்கொண்டு வந்து வார்டர்கள் கட்டப்பட்டுக் கிடப்பதைக் கண்டு எங்களைத் தேட வாரம்பித்ததுபோலத் தோன்றியது. நாங்கள் நீந்தத் தெரிந்தவர்களாதலால் ஜலத்திலேயே வெகு நேரம் அமருவதும் மேலே எழுவதுமாக விருந்தோம். சரியாக நடு நிசிக்கு ஓர் மோட்டார் பஸ்ஸை அங்கு பொன்னுசாமி கொண்டுவந்தான். நாங்கள் சந்தடி செய்யாமல் தப்பித்துக்கொண்டு வந்துவிட்டோம்.

எங்களை இந்த இடத்திற்கே நேரே கொண்டுவந்து விட்டான். எங்களை அடையாளங் கண்டுகொள்ளா திருக்கும் பொருட்டு எல்

182978

லோருக்கும் இம் மாதிரியான வேஷத்தைப் போட்டுத் தலையில் டொப்பியைக் கவிழ்த்துவிட்டான். இதுவரையில் நாங்கள் யாரா லும் சந்தேகிக்கப்படவே இல்லை. சந்தேகங் கூடாதென்று வாரா வாரம் மாதா கோயிலுக்கு அனுப்புகிறான்.

அதோடு எங்களையும் பொன்னுசாமியையும் ஒருவரும் சந்தே கிக்காமலிருக்கும் பொருட்டு சிறிது காலம் வரையில் ஆபத் ஸகாய நிலயம் என்ற பெயருடன் ஒரு நிலயத்தை ஸ்தாபித்திருக்கிறான். கெட்டுப்போன குச்சுக்காரி பொருத்தியை அவன் கைக்குள் போட்டுக்கொண்டு அவளை அதற்கு மேற் பார்வை பார்ப்பவளாக நியமித்திருக்கிறான்.

சில பெண்களையும் பிள்ளைகளையும் சகாயம் செய்வதாகக் கூறி யழைத்துச் செல்வதும் அவர்களை இழுத்துக்கொண்டு தனவந்தர்கள் வீடுகளுக்குச் சென்று சகாயத்திற்குப் பணம் பெறுவதும், வேண்டு மென்று விவாகம் செய்வது போல சிலரை சர்ச்சில் அழைத்துச் சென்று விவாகம் செய்விப்பதும், பின்னும் சிலருக்கு ஹிந்து தர்மத் தின்படியே விவாகம் செய்து காட்டுவதும் இதை யொரு பேரமாகக் கொண்டு முக்கியமானவர்களிடம் பணத்தைப் பறித்துக்கொண்டு அப் பெண்களையும் பிள்ளைகளையும் உடன்பட்டவர்களையும் கெடுத் துக் கூட்டத்தில் சேர்த்துக்கொள்வதும் உடன்படாதவர்களை விரட்டி விடுவதுமாகச் சில நாட்களாய் வியாபாரம் நடந்துவருகிறது. இன்னும் என்ன நடக்குமோ தெரியாது.

நாயுடு:—(குறுக்கிட்டு) ஆமாம். கொள்ளை யடிப்பதில்—மோசம் செய்வதில்—இதொரு புதிய மாதிரியாக விருக்கிறது. உங்களை எல் லாம் விடுவித்ததன் காரணம் என்ன? நாளைய தினம் போலீஸாரிடம் சிக்கிக்கொண்டால் என்ன செய்வதாக யோசனை.

வீரப்:—நாயுடுகாரு! இத்தனை தூரம் சொன்னவன் அதையும் சொல்லிவிடுகிறேன். உங்களால் துப்பு துலக்கப்பட்டு தண்டிக்கப் பட்ட சில கைதிகள் அந்த சிறைச்சாலையில் இருக்கிறார்கள். சிலர் விடுதலையாகி விட்டார்கள். அவர்களுக்கெல்லாம் உங்கள் மீதுள்ள ஆத்திரமும் த்வேஷமும் கூறத் திறமன்று. அவர்கள் எல்லோரும்

ஒருங்கே கூடி உங்களைத் துலைத்துவிடத் தீர்மானித்து விட்டார்கள். உங்களை ஒழித்துவிட்டால் பிறகு எந்த போலீஸ்காரனையும் ஏய்த்து விடுவார்களாம். எப்படியும் ஜெயித்து விடுவார்களாம். இவ்விதம் செய்வதற்கு திடீரென்று செய்தால் சந்தேகம் உண்டாகு மென்று எண்ணி இவ்விதமான நல்ல வேலைகளைச் செய்து வருவது போல நடிக்கிறார்கள். இப்போது அந்த பொன்னுசாமி வரும் நேரமாகி விட்டது.

அம்புஜ:—அப்பா! எனக்கு ஒன்றும் விஷயமே விளங்கவில்லையே! ஒரே குழப்பமாக விருக்கிறது. தாங்கள் இந்த வேஷம் போட்டுவித்து என்னை யாட்டியதற்குக் காரணம் என்ன? நீங்கள் நாடிய மனிதர்கள் வேறு. இப்போது பிடித்த மனிதன் வேறு. இதற்கும் அதற்கும் என்ன சம்மந்தம்? இதைச் சொல்லுங்கள்.

நாயுடு:—(கலகலவென்று நகைத்துக்கொண்டே) செல்வீ! இப்போதே சொல்லவேண்டுமா! ஊம். சொல்கிறேன் கேள். இதற்கும் அதற்கும் சம்பந்த மிருப்பதுபோல முதலில் உனக்கே தெரியவில்லை. பிறகு இப்போது இம் மனிதன் விவரமாகக் கூறிய பிறகு சிறிது விளங்கி இருக்கலாம். கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போலாயிற்று. அதாவது சென்ற சில மாத காலமாக இப்பொழுது இந்த ஆசாமி தெரிவித்த ஆபத் சகாய நிலயத்தின் விஷயத்தை நான் ஒரு சிறிது உணர்ந்தேன்.

எப்படி அதை யறிந்தேன் எனில் ஏற்கெனவே நான் ஒரு குற்றவாளியைப் பிடிக்கும் விஷயத்தில் திரிந்து கொண்டிருந்த சமயம் சிலரைச் சந்திக்க நேர்ந்தது. அக்காலை விசாரித்ததில் யாரோ பெரிய ஞான யோகியாரால் ஆபத் ஸகாய நிலயம் ஒன்று நிறுவப் பட்டிருப்பதாயும் அதற்காகத் தாம் 1000 ரூபாய் நன்கொடை கொடுத்தாயும் ஒருவர் சொன்னார்.

இத்தகைய நிலயம் எங்கு யாரால் எப்போது, நிறுவப்பட்ட தென்றதைக் கேட்டேன். அவருக்குத் தெரியவில்லை. பின்னும் சிலர் தம் சக்தியானுசாரம் பண உதவி செய்ததாகவும் கூறினார்கள். எனக்கு மட்டும் இந்த விஷயத்தில் நம்பிக்கையே ஏற்பட

வில்லை. இதைப் பற்றி என்னால் கூடியவரையில் விசாரித்துப் பார்த்தேன். புலன் ஏற்படவில்லை.

பிறகு இதை முதலில் துப்பறியும் பொருட்டு நான் ஒரு தந்திரம் செய்தேன். அதாவது சமீபத்தில் ஓர் ஜெமீந்தாரரின் வழக்கில் நான் ஈடுபட்டிருந்தேன். அச் சமயம் நானும் ஓர் ஜமீந்தார் போல நடித்து இவ் ஊரில் யாத்ரா மார்க்கமாக வந்திருப்பது போலும், தான தர்மம் நிறையச் செய்வது போலும் என் ஆள் மூலமாகவே பறை சாற்றிப் பரவ விட்டேன்.

இச் செய்தி பரவிய சில தினத்திற்குள்ளேயே ஒரு வயோதிகர் இரண்டு பெரிய பெண்களையும் இரண்டு ஆண்களையும் அழைத்துக் கொண்டு வந்து ஆபத் ஸகாய நிலயத்தைப் பற்றிப் பேசி யாசகம் கேட்டார். நான் யாசகம் கொடுப்பதாகவே கூறிவிட்டு அதன் கொள்கைகளைப் பற்றி எல்லாம் கேட்டேன். ஏதேதோ சமாதான மான பதிலைக் கூறினர். பிறகு ஒரு செக்கு 500 ரூபாய்க்கு எழுதிக் கொடுத்தேன். அவர் போய்விட்டார்.

உடனே நான் பாங்கிற்குச் சென்று இந்த நம்பருள்ள செக்கு மாற்றப் படும்போது அது எந்த கையெழுத்துடன் மாற்றப்படுகிற தென்பதைக் கவனிக்கும் பொருட்டு அங்கேயே மாறு வேடத்துட னிருந்தேன். அது பொன்னுசாமி என்ற பெயருடன் யாரோ ஒரு வன் கொண்டு வந்து மாற்றியதைக் கண்டு பிடித்தேன். மாற்றியவன் பொன்னுசாமி யல்ல வென்பதையும் தெரிந்து கொண்டேன்.

பிறகு ஆபத் ஸகாய நிலயத்திற்கு உடன் படாது விரட்டி விட்ட சில பெண்களும் பிள்ளைகளும் இதைப் பற்றி வெளியில் கூற அஞ்சி இருந்தார்களாம். அவர்களும் துணிந்து செக்கு மாற்றப் பட்ட அன்றே என்னிடம் வந்து இத் தகவல்களைத் தெரிவித்தார்கள். எல்லாவற்றையும் விசாரித்துக்கொண்டு மேலும் கவனிக்கையில் ஜெமீந்தார் கேஸ் அநுகூலமாகி விட்டதும் அந்தம்மாள் இவ் விஷ யங்களை என்னிடம் கூறியதும் காமுவை நான் பார்த்ததும் பொன்னுசாமியின் விஷயம் அங்கு தெரிந்துகொண்டதும் இத்தனை காரியங்களும் ஆயின.

பொன்னுசாமி என்பவன் இக் காரியத்தில் சம்மந்தப்பட்டவன் தானு என்பதை யறியும் பொருட்டுத்தான் காமுவிடம் புகைப் படம் கேட்டேன். அவள் வண்டியோடு சாமான் போய்விட்டதாகத் தெரிவித்ததும், வண்டிக்கார வரதனின் வண்டியில் சென்றதாகக் கூறியது ஞாபகத்திற்கு வந்ததும் அவன் வீட்டையும் அவன் ஆள்களையும் சோதித்தேன்.

காமுவின் சாமான்கள் முற்றிலும் கிடைத்துவிட்டன. புகைப் படத்தைப் பார்த்தேன். அதை நானே இதோ ஜேபியிலேயே வைத்திருக்கிறேன். அந்த புகைப் படத்தில் பார்த்த மனிதனே நாட்டுப் புறத்தான் போல வேஷம் போட்டு நடித்துப் பணத்தைப் பெற்றுச் சென்ருன். இவைகளை நேரில் பார்த்த பிறகு அம் மனிதன் மீது பெருத்த சந்தேகங்கள் உண்டாகிவிட்டன.

ஒரு மனிதன் ஒரு நல்ல காரியத்தைச் செய்தானேயானல் அதன் புகழும் பெயரும் பரிமளிக்கும்படிக்கும் தன் பெயர் பிரகாசிக்கும்படிக்கும் டாம் டாம் செய்வானே யன்றி கிணற்றில் கல்லைப் போட்டது போலச் செய்யவே மாட்டான். இந்த ஆபத் சகாய நிலயத்தின் விஷயத்தில் எனக்குப் பரம சந்தேகங்கள் உண்டாயின.

அதே மனிதன்—அயோக்கியன்—இத்தகைய நல்ல காரியத்தில் ப்ரவேசித்திருப்பதும், அதே மனிதன் காமுவைக் கெடுத்தது மன்னியில் அவளைப் பிடித்தும் கொடுத்துப் பணம் வாங்கியதும், அதே மனிதன் விவாகத்திற்கு வேறு ப்ரயத்தனம் செய்ததும் எல்லாவற்றையும் யோசித்துப் பார்த்தால் அந்த மனிதன் மீது பலமான சந்தேகம் உண்டாகவில்லையா? நான் இத்தனையும் கவனித்ததாகவும் கண்டு பிடித்ததாகவும் என்னைத் தவிர உனக்குக்கூட இதை நான் வெளியிடவில்லை. இதை வெளியில் அறியக் கூடாதென்பதே எனது நோக்கம்.

அதோடு எனக்குச் சிலரிட மிருந்து மொட்டைக் கடிதங்கள் கிடைத்தன. என்னவெனில் என்மீது க்ஷாத்திர மிருப்பதால் என்னை கூடிய சீக்கிரத்தில் தலைத்துவிடப் போவதாகவும் எமனுலக

யாத்திரைக்குத் தயாராக இருக்கும்படிக்கும் எழுதி இருந்தது. அந்த எழுத்துக்களிலிருந்து இவர்கள் என்னால் பிடிக்கப்பட்டுத் தண்டனையை யடைந்தவர்கள் என்பதை உடனே தெரிந்துகொண்டேன். அந்த கடிதங்களையும் அப்பொழுதே போலீஸாரிடம் ஒப்புவித்தேன்.

இதன் மத்தியில் ஜெயிலிருந்து சிலர் தப்பி விட்டதாயும் அவர்களை விட்டுவிட உடந்தைபா யிருந்த வார்டரைக் கைது செய்திருப்பதாயும் ஒரு செய்தி யறிந்தேன். இவனுடைய பெற்றோர்கள் என்னிடம் வந்து முறை யிட்டார்கள். வார்டருடைய அண்ணனும் வந்து முறையிட்டான். எல்லாம் கலக்கத்தின்மேல் கலக்கமாகி விட்டது. நான் அது முதல் இந்த காமு விஷயத்தில் இவனே வந்து பிடித்துக் கொடுத்ததில் ஏதோ விசேஷமிருக்க வேண்டுமென்று தோன்றியதால் கவனித்து வந்தேன்.

அதோடு நான் இரண்டு தினங்களுக்கு முன்பு மாதா கோயிலில் ஒருவரை சந்திக்கச் சென்றிருந்தபோது இந்த வீராசாமி அன்று சிறு பெண்ணைப் போல வேஷம் பூண்டு அங்கு ப்ரார்த்தனைக்கு வந்திருந்தான். அவனை உற்றுக் கவனித்ததில் நான் வெகு விரைவில் அடையாளங் கண்டுகொண்டேன். அவனோடு பொன்னுசாமியும் இருந்ததைக் கண்டேன்.

இவனைப் பிடித்தால் வெகு எளிதில் மற்றவற்றைக் கண்டு பிடித்துவிடலாம் என்கிற நம்பிக்கை தோன்றியது. அன்றும் இவன் ஒரு பிள்ளையைத் தன்னோடு அழைத்துச் சென்றதைக் கண்டேன். உன்னை இம்மாதிரி அழைத்து வந்தால் இவன் என்ன செய்கிறான் பார்ப்போம் என்று தோன்றியதால் அழைத்து வந்தேன். காரியமும் முடிந்தது.

அதோடு இன்னொரு முக்கிய விசேஷம். இத்தனை விஷயங்களையும் இவனெதிரில் திடீரென்று தெரிவித்துவிட்டதைப் பற்றி நீ ஆச்சரியப்படலாம். இவன் பெற்றோர்களோ என்னிடம் வந்து தினம் துடிதுடிக்கின்றார்கள். இவன் தப்பித்துக்கொண்டு வந்து

விட்ட குற்றத்திற்காக எப்படியும் தண்டனை யடைந்தே தீர வேண்டும். எனினும் முன் தரம் தண்டித்ததே தப்பிதம் என்றதை நான் எடுத்துக் கூறி சிறிது தண்டனையையாவது குறைக்க வேண்டும் என்று பாடு படுகிறேன்.

இதை எப்படியோ எதிரிகள் தெரிந்து கொண்டதோடு நான் இவனை வேஷத்துடன் பார்த்துவிட்டேன் என்பதையும் வெகு கூர்மையாகக் கவனித்துக் கொண்டார்கள். அதனால் அவர்களுக்கு பயமே உண்டாகிவிட்டது. இவனைக் கொன்றுவிட்டால் தங்கள் ரகஸியம் வெளி வர ப்ரமேயமில்லை. என்னையும் தொலைத்துவிட்டால் இனி நிர்ப்பயமாக இருக்கலாம் என்று ஏற்பாடு செய்துவிட்டதை நான் நேற்று இரவுதான் தெரிந்துகொண்டேன்.

அதனால் இந்த விஷயங்களைச் சாவதானமாக இவனிடமே தெரிவித்து இவனையுங் காப்பாற்றி இவன் மூலம் மற்ற விவரங்களையும் அறிய வேண்டுமென்று இவ்விதம் செய்தேன். வீரப்பா! என்ன விழிக்கின்றாய்? இன்று நீ கண்டத்திலிருந்து தப்பினாய் என்றே நினைக்கவேண்டும். வீரப்பா! ஒரே வார்த்தை: பிழைக்க வேண்டுமென்றும், நன்றாக இருக்கவேண்டு மென்றும் உனக்குத் தோன்றுகின்றதா, அல்லது பாழாகி அதோகதியாகி விடவேண்டுமென்று தோன்றுகிறதா? அதைக் கூறிவிடு" என்றார்.

இந்த வரலாறுகளைக் கேட்ட வீரப்பனுக்கு கூறத் திறமற்ற வியப்பும், திகைப்பும், பயமும் உண்டாகிவிட்டன. தான் இதுவரையில் செய்துவிட்ட அக்கிரமங்களும் துஷ்ட சகவாஸத்தின் கொடுமையும் அதனால் தனக்கு நேர்ந்த, நேர விருக்கும் ஆபத்துக்களின் விபரீத பயங்கரமும் அவன் மனத்தில் கபீரென்று எழுந்தன. இத்தனை விவரங்களையும் இவர் எப்படி ஆராய்ச்சி செய்திருக்கிறாரோ என்ற வியப்பு ஒரு புறம் தாண்டவ மாடுகின்றது.

அவன் நாயுடுவின் கால்களைப் பிடித்துக்கொண்டு "ஐயா! எனக்கு இப்போது என்ன பேசுவதென்பதே தெரியவில்லை. என்னுடைய வாழ்நாட்களை இவ்விதமே வியர்த்தமாகப் பாழ் படுத்திவிட்டேன். இப்போதுதான் எனது எதிர்கால வாழ்க்கையின் பழுங்

கரம் விபரீதமாகக் கண்முன் தெரிகின்றது. என்னை எந்த வழியில் காப்பாற்றுவீர்களோ அது தங்கள் பாரம். நான் தங்களைச் சரண மடைந்துவிட்டேன். நான் என்ன செய்யவேண்டும் சொல்லுங்கள். ஏன்! நாம் எல்லோரும் இப்போதே போய்விட்டால் என்ன. வாருங்களேன்.'' என்று வெகு ஆத்திரத்துடன் கேட்டான்.

நாயு:—ஓகோ! அந்த காரியம் அத்தனை எளிசாக நினைத்துவிட்டாயா? உன்னை இப்போது நான் அழைத்துச் சென்று விடுவதால் ஒரு காரியமும் சாதிக்க முடியாது. எல்லாம் கெட்டுப்போய்விடும். அதற்காகவா நான் இத்தனை கஷ்டப்படுவது. இரு. இரு. சற்று பொறுமையாக இரு. இப்போது நீ என்ன செய்ய வேண்டு மென்றால் நீ மாறுதலை யடைந்துவிட்டதாகவோ அல்லது விஷயத்தை அறிந்துகொண்டதாகவோ ஒரு சிறிதும் வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல் பழய மாதிரியே நடக்கவேண்டும்.! அதோடு என்னைப் பிடித்து விட்டதாக நீ அவர்களிடம் பெருமை கூறிக்கொள்ள வேண்டும். அந்த தடபுடல் தாண்டவத்தில் அவர்கள் உன்னைக் கொலை செய்ய நினைத்ததை ஒருக்கால் மறக்கலாம் என்று நினைக்கிறேன். அப்படி ஏதேனும் செய்ய வந்தாலும் நான் இருக்கிறேன், தப்ப வைக்கிறேன். நீ பயப்படாதே. நான் அகப்பட்டுக் கொண்டது போல நடித்தால் தான் பிறகு காரியம் ஆகும்.

வீரப்பா! நீ இன்னொரு காரியம் செய்யவேண்டும். பொன்னு சாமியின் பெட்டியை எப்படியாவது நீ சோதனை போட்டு......இந்த நம்பர்களுள்ள 50 ரூபாய் நோட்டுக்கள் இருக்கிறதா வென்று பார்த்துக்கொள்ள வேண்டும். அதுதான் இப்போது நான் ப்ரவேசித்துள்ள காரியத்திற்கு மிகவும் அவசியமானது. இதை மட்டும் கெட்டியாக நினைவில் வைத்துக்கொள். தெரிந்ததா! நீ இப்போது ஏதோ சொல்லிவிட்டு மீண்டும் அந்தப் பக்கம் திரும்பி என்னைக் காட்டிக் கொடுக்க நினைத்தால் அப்போது எனக்கொன்றும் நஷ்டமில்லை. சற்று தாமதத்துடன் நான் எப்படியும் ஜெயித்துவிடுவேன். ஆபத்து முற்றிலும் உனக்குத்தான் என்பது ஞாபக மிருக்கட்டும். என்ன சொல்கிறாய்?

வீர:—ஆகா! என்னைப் பற்றிக் கவலையே வேண்டாம். நான் இனி உங்களுடைய ஆள் என்று நிச்சயமாக நம்புங்கள். இது முக்காலும் உண்மை என்று வாக்குறுதி கொடுத்தான். நாயுடு அவன் நடந்துகொள்ளவேண்டிய முக்கிய விஷயங்களை எல்லாம் தெரிவித்தார்.

உடனே வீரப்பன் இரும்பு சங்கிலி கொண்டு வந்து நாயுடு, அம்புஜம், கூட வந்தவன் மூவரையும் கட்டிவிட்டான். தன்னோடு இருந்த மற்றவனை அதுவரையில் அவன் கவனிக்கவில்லை. வீரப்பன் "ஹா நாயுடுவா!" என்றதும் அவன் சந்தோஷத்தில் தலை கால் தெரியாமல் வெளியே ஓடி முக்கியமானவர்களுக் கெல்லாம் "நாயுடுவை வீரப்பன் தந்திரமாகப் பிடித்துவிட்டான். நாயுடுவும் அம்புஜமும் நம் கையில் சிக்கிவிட்டார்கள்" என்று சொல்லிவிட்டான்.

இதைக் கேட்ட எல்லா ஜனங்களும் ஓட்டமாக இங்கு ஓடி வந்தார்கள். அப்போதுதான் வீரப்பன் இவர்களைச் சங்கிலியால் போட்டுக் கட்டிய காட்சியை யவர்கள் கண்டு ஆநந்தங் கொண்டு "வீரப்பா! மெச்சினேன். மெச்சினேன். உன்னுடைய சாமர்த்தியமே சாமர்த்தியம். வீரப்பா! சபாஷ்!" என்று அவனைத் தட்டிக் கொடுத்தார்கள்.

நாயுடுவையும் அம்புஜத்தையும் பார்த்துப் பரிகஸித்துத் தாறுமாறுகப் பேசி நகைத்தார்கள். "ஐயோ, பாவம்! புலியே! இப்போது நீர் புலியா, எலியா! முகத்தில் கிலிதான் தாண்டவமாடுகிறது. சபாஷ்! இப்போதுதான் உமது பெரும் புகழ் பிரகாசிக்கிறது." என்று வாய்க்கு வந்தபடிக் கூறி நகைத்தார்கள்.

நாயுடுவும் அம்புஜமும் வாயைத் திறக்கவே இல்லை. எல்லோரையும் கடைக்கண்ணுல் பார்த்துக்கொண்டே நின்றூர்கள். இதற்குள் இருள் சூழ்ந்துவிட்டது. மினுக்கு மினுக்கு என்று விளக்கு பொருத்தப்பட்டது. நாயுடு அகப்பட்டுக் கொண்ட சந்தோஷத்தைக் கூறவே திறமன்று. எல்லோரும் குசுகுசு வென்று பேசிக் கொண்டார்கள். அடுத்த நிமிடம் லாரி போன்று பெரிய மோட்

டார்கார் வந்தது. இம் மூவரையும் கட்டுத் தூக்காகக் கட்டி அந்த காரில் கொண்டு ஏற்றினர்கள்.

காரும் வேகமாகச் சென்று கொண்டிருக்கிறது. , சுமார் 10 மைல் தூரம் சென்ற பிறகு காரை ஓரிடத்தில் நிறுத்தி அப்பு ஜத்தை மட்டும் அலக்காகத் தூக்கிக்கொண்டு சென்றுவிட்டார்கள். நாயுடுவையும் மற்றவனையும் பின்னும் சிறிது தூரம் சென்றதும் இறக்கினர்கள். மழை பெய்து சேறும் தண்ணீரும் வீதியில் அசங் கியமாக இருக்கிறது.

அந்த இடத்திலிருந்து சுமார் ஒரு பர்லாங்கு தூரத்திற்கு இழுத்துக்கொண்டு சென்றார்கள். அட்டார வெளியான மைதா னத்தில் ஓலைகளால் வட்டமாக வளைத்து ரவுண்டாகக் கட்டி இருந் தது. நாயுடுவையும் மற்றவனையும் ஓராள் உயரமுள்ள அந்த ஓலைக் கட்டிடத்திற்குள் தூக்கி எறிந்தார்கள்.

குஸ்தியிலும், ஜம்பிங்கிலும் நன்றாகக் கைதேர்ந்த நமது நாயுடு வும் அவர் சிஷ்யனும் என்னதான் நடக்கிறது பார்க்கலாம் என்ற குண்டு தைரியத்துடன் இருந்தார்கள். இவர்களைத் தள்ளிய மறு நிமிஷமே "ஆ...ஹா...அடேய்! சரியான புலிகள்—முதல் தரமான புலிகள்—குகையில் அகப்பட்டுக் கொண்டன. இனி பயம் தொலைந்தது. வையடா நெருப்பை...உம்...நாற்புறமும் ஓலையில் நெருப்பு வையுங்கள் என்று பெரிய ஆரவாரம் செய்தார்கள்

அடுத்த விநாடியே ஓலையில் நாற்புறமும் தீ வைக்கப்பட்டது. அப்பொழுது நள்ளிருள் சுமார் 12 மணிக்கு மேலிருக்கும். கப கப வென்று நெருப்பு வைத்ததும் எல்லோரும் பெருத்த ஆரவாரமும் அமர்க்களமும் செய்துகொண்டு "நாயுடு தொலைந்தான். நாயுடு ஒழிந் தான். பயம் நீங்கியது; நமது ஜெயம் ஓங்கியது." என்று கூச்ச லிட வாரம்பித்தார்கள். கை கால்களைக் கட்டி உருட்டப்பட்டுள்ள இருவருக்கும் எப்படித்தானிருக்கும். நாயுடுவின் சிஷ்யனுக்கு இந்த கோரமான சம்பவத்தைக் கண்டதும் பாதி உயிரும் போய் விட்டதென்றே கூறலாம். கல்லாய்ச் சமைந்துவிட்டான்.

23-வது அதிகாரம்

வேதனையின் அம்பு—சோதரியின் அன்பு

உலகத்தில் மக்களுக்கு நல்ல விஷயங்கள் மனத்தில் பதிந்து பரிசுத்தப்படச் செய்வதை விட அதி வேகமாக தீய விஷயமும் ஆத்திரமும் அவசர புத்தியுந்தான் மனத்தில் பதிந்து சட்பட்டென்று அதன் போக்காக அந்த எண்ணமாகிய அஸ்திவாரத்தின் மேலேயே கட்டிடம் கட்டத் துடங்கி விடுவதும், பிறகு அது இடிந்து விழுந்து வருந்துவதும் சகஜ மாகிவிட்டது.

நமது காமுவையும் அவள் தாயாரையும் பிடித்துக் கைதி யாக்கி வழக்கு நடத்தும் இன்ஸ்பெக்டருக்கோ இந்த வழக்கு விரை வில் நடந்து தனக்கு அளவிலாத கீர்த்தி வந்துவிட வேண்டுமென்கிற ஆவல் இரவு பகலாக வாட்டுகிறது. தினந்தோறும் தமது போலீஸ் அட்டகாஸ தடபுடலில் அவருக்குக் கீழுள்ள கான்ஸ்டேபில்கள் படும் பாடோ, அவஸ்தையோ கூறத் திறமன்று.

உத்யோக சம்மந்தமாகப் படும் துன்பம் போதாதென்று இவ ருடைய வீட்டிற்கும் குடும்பத்திற்கும் கூட அவர்கள் உழைப்பதும், ஓடி யாடிப் பாடு படுவதும் அந்த கான்ஸ்டேபில்களுக்குத்தான் அதன் கஷ்டம் தெரியும். தனக்கு பெரிய சக்ரவர்த்தி பட்டம் கிடைத்துவிட்டதாக இன்ஸ்பெக்டர் எண்ணி கீழ்ச்சிப்பந்திகளைக் கசக்கிப் பிழிந்து உபத்திரவிப்பதற்கு வட்டியும் முதலுமாக இவ ருக்கு மேலதிகாரி இவரைச் சாறு பிழிந்து விடுகிறார்.

தன்னைப் போன்று தானே பிறர் என்ற எண்ணம் நமது இன்ஸ் பெக்டர் ஏகாம்பரத்திற்குச் சற்றும் கிடையாது. தனது மனக் கஷ் டங்கள் தீர ஆத்திரந் தணியக் கீழுள்ளவர்களிடம் காட்டி சாந்தி

யடையவதே அவருடைய 10 வருடத்திய தொழிலாகிவிட்டது. வீட்டில் சமயல்காரனே, வேலைக்காரனே வரவில்லை என்ருல் அந்த கோபமும் அந்த ஏழை வேலைக்காரன்—எளியசம்பளம் வாங்கும்இம் மனிதன்—மீதுதான் பாயும். அவர்கள்தான் அதையும் செய்ய வேண் டும். "ஏண்டா மடையா! நான் இன்று எப்படி சாப்பிடுவதென்று நினைத்தாய். பட்டினி கிடந்து சாகட்டுமே என்ற எண்ணமா?" என்று அந்த வேலைக்காரனை அதட்டுவரே யன்றி மனைவி யிடம் திரும்பிக் கூடப் பார்க்கமாட்டார். அப்படி பார்த்து விட்டாலோ அன்று அவர் படும் பாடு ஒன்ஞன ஏகாம்பரத்திற்குத்தான் வெளிச் சம். அந்த பயத்தினல் அம்மாளிடம் ஐயா பூனைக்குட்டி போல வாயையே திறக்கமாட்டார் பாவம்.

அனேக நாட்கள் இவருக்கு இராக்கால வேலை இருக்கும். அப்படி இல்லாத அன்ருவது இரவு தூக்கம் உண்டா! அதுவும் கிடையாது. அன்று சினிமா, ட்ராமா முதலியவைகளுக்கு இலவச மாக டிக்கட்டு சம்பாதித்துக்கொண்டு மனைவியை அழைத்துச்சென் ருல்தான் அம்மாளின் சந்தோஷமான பார்வையும் பேச்சும் கிடைக் கும். இல்லையேல் கிடுகிடுப்புதான். வீட்டில் கட்டிய மனைவி யிடத் தில் கேவலமான எலிதான். வெளியிலோ அட்டகாஸப் போலீஸ் தர்பார் புலிதான்.

இத்தகைய மனிதர் வெளியிலும் அதிகாரம் செய்யாமல் என்ன செய்யக்கூடும். அந்த வழக்கை இனி தாமதப் படுத்துவது வேண்டாம் என்றும் அதை நடத்தி விடவேண்டும் என்றும் தனக்கு மேலுள்ள அதிகாரிகளிட மெல்லாம் கூறிக் கூறி ஏற்பாடு செய்தார். சரியான சாக்ஷிக ளெல்லாம் கிடைத்துவிட்டன என்று துரிதப்படுத்தி எஜமானுக்களைச் சரியானபடி காக்காய் பிடித்து வழக்கை ஜோடித்துவிட்டார்.

ஏழைக் கைதிகளாகிய இவர்களுக்கு ச்ரத்தை எடுத்துக் கொண்டு பாடு படுகிறவர்கள்தான் யாரிருக்கிருர்கள். இட்டது சட்டமல்லவா! வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. புழுகு போல தத்தளித்துக் கொண்டிருக்கும் தாயும் மகளும் கோர் டிற்குக் கொண்டு வரப்பட்டார்கள்.

மகா மானியாயும், சாந்தமும் உருக் கொண்ட ;காமுவுக்குத் தன்னைக் கூட்டிற்கொண்டு நிறுத்தியதும் அவமானத்தினால் தேகமே குன்றிப்போய் உயிரற்ற சவம்போலாய் விட்டாள். விசாலமோ தான் எத்தனை கஷ்டங்களை யனுபவித்தாலும் உத்தமமாயும் மானியாயும் பிழைத்தால் போதுமென்று ஆதியில் அத்தனை கஷ்டப்பட்டும் அந்திமத்தில் இத்தகைய அவமானமும்,தலை யிறக்கமும்,படாப் பழியும் வந்துவிட்டதை எண்ணிப் புண்ணாகத் துடிக்கின்றாள். தாயும் மகளும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொள்வவதற்கும் கஷ்டப் படுகிறார்கள்.

வரதனும், கன்னியம்மாளும் இம்மாதிரி கூண்டில் நிற்பதில் கணக்கற்ற தரம் பழகித் தேர்ந்தவர்களாதலால் சற்றும் கூச்சமின்றி வெகு அட்டகாஸமாக நிற்கிறார்கள். கூட்டமோ எண்ணற்று கஜ கஜ வென்று கூடிவிட்டது. இக் கூட்டத்து மத்தியில் "மாமி! இதோ மங்களவல்லியைக் கொண்டு வந்திருக்கிறேன். அம்மா கூட வந்திருக்கிறார்கள் பாருங்கள். மாமி! அழவேண்டாம்...குழந்தை முன்னை விட நன்றாகப் பருத்திருக்கிறது; விளையாடுகிறது. பாருங்கள்." என்று கூறிக்கொண்டே கோகிலம் கும்பலில் நசுங்கியவாறு கையில் குழந்தையுடன் வரவும், அவளுடைய தாயார் மெலிந்து போய் விசனமே வடிவாய் பின்னால் வந்தாள்.

இந்த குரலைக் கேட்ட காமு தன்னை மீறி திரும்பிப் பார்த்தாள். அங்கு கபடமறியாத துல்லியமான சிறுமி கோகிலம் தன்னுருயிர்க் குழந்தையை எடுத்துக்கொண்டு வருவதைக் கண்ட காமுவுக்குத் தலைக்கு மிஞ்சிய துயரம் பொங்குந் தறுவாயிலும் பெற்ற மனம் பித்து என்ற பழமொழிப்படிக்குப் புத்திர வாத்ஸல்யம் கரை புரண்டு ஒடியது. "என் கோகிலம் செல்வி!...ஹா...மங்களம்... பெயரளவில் மங்களந்தான். நடப்பது யாவும் அமங்களமும் ஆபத்துந்தான்......உம்...பச்சை சிசு...அதன் மீது குறை கூறுவது மடத்தனமன்றோ? அந்த ஒரு குழந்தையினாலன்றோ என்னுடைய கதியும் விதியும் இத்தனை தூரத்திற்கு வந்தது.

அந்தோ! என்ன கொடுமை......சீச்சீ......நமது பிழைப்பிற்குக் குழந்தையைப் பார்க்கவேண்டுமா! அந்த ஆசையும் ஒருகேடா?

நாம் உலகத்தவரைப் போல நன்று யிருக்கப் பாக்கியம் செய்திருந் தால் இம்மாதிரி என் தலைவிதி நேர்ந்திருக்குமா? உம்...நாம் பார்க் கவே வேண்டாம். எப்படியாவது குழந்தை உயிருடனிருந்தால் போதும்'' என்று மனத்தை தைரியப்படுத்திக்கொண்டு சாய்ந்து விட்டாள்.

விசாலத்திற்குக் குழந்தையைப் பார்த்ததும் ஆசை அடித்துக் கொண்டது. ஆனால் தன்னிடம் குழந்தையைக் கொடுக்கமாட் டார்கள் என்பது தெரியுமாதலால் கண்ணீர் பெருகியவாறு அக் குழந்தையையே பார்த்துக் கொண்டிருந்தாள். கோதாவரியம்மாள் காமுவைக் கண்டு கண்ணீர் உதிர்த்தாள். இருவரும் சிறிது நேரம் தத்தளித்து வருந்தி பரஸ்பரம் துயரங்களைக் கூறிக் கலங்கினர்கள். இதற்குள் நேரமாகிவிட்டது. கோர்ட்டு நடவடிக்கைகள் ஆரம்ப மாகிவிட்டன.

அனாதைப் பரதேசிகளுக்கு யார் திக்கு? வக்கீலை வைத்து வாதிக்கப் பணமும் கிடையாதாகையினால் வழக்கு எத்தனை அழகாக நடக்கும் என்று கூறவேண்டுமா! போலீஸார் சாக்ஷிகளும் இன்ஸ் பெக்டரின் சாதுரிய சாமர்த்திய ஜோடிப்பின் திறமும், வக்கீலின் வாதமும் வெகு அழகாக முறையே நடைபெற்றன. அதன் சாராம்ச மாவது.

காமு அக்ரமச் சகவாசம் செய்து திருட்டுக் கரு தரித்துவிட் டதை மறைக்கும் பொருட்டுப் பலவித முயற்சிகள் செய்ததாயும் அவள் கருப்பத்தை உறவினளாகிய கிழவி எப்படியோ தெரிந்து கொண்டு வந்து கண்டித்ததாயும், அவளால் அது வெளியாகி அவமா னம் அதிகரித்துவிடும்; தமது பந்து இனத்தினர்கள் ஜாதி கட்டுப் போட்டுவிடுவார்கள்; பிறகு தலை காட்ட முடியாமல் போய்விடும் பிழைப்புக்கே பங்கம் விளைந்துவிடும் என்ற பயமும் கிலியும் பிடித்து விட்டதாயும் அதனால் கிழவியையும் கொன்றுவிட்டு அந்தக் கருவி லுள்ள குழந்தையையும் தொலைத்துவிட்டால் தாம் ஒரு விஷயமும் அறியாதவர்கள் போல பழயபடி இருக்கலாம் என்ற நோக்கத்துடன் கிழவியைக் கொன்றுவிட்டதோடு அன்றே பிரஸவமான குழந்தை

யையும் கொல்ல எத்தனித்து இந்த பக்கா ஆசாமியான வரதன், கன்னி இருவரின் உதவியை நாடி யிருக்கிறார்கள். குழந்தையைக் கொல்லும் சமயம் பெத்த மனமாகையால் கடைசீ நிமிடத்தில் மனம் வராது போராடி இருக்கிறாள். அச்சமயம் இவர்களின் ஊழல்களுக்கு உடந்தையா யிருந்தவன் வந்து காப்பாற்றுவது போல நடித்து அழைத்துச் சென்று நடு வழியில் கை விட்டுவிட்டான்.

தான் கொலைக் குற்றத்தில் அகப்பட்டுக் கொள்ளாதிருக்கும் பொருட்டு அம் மனிதன் தப்பித்துக்கொண்டான். போலீஸாராகிய நாங்களா விடுபவர்கள். அவனையும் கைது செய்துவிட்டோம். இன்றுதான் பிடிபட்டான்.—என்றதும் காமுவின் இதயம் துடி துடித்தது. ஹா!...நம்மைக் காப்பாற்றிய தர்ம தேவதை போன்ற உத்தம வீரனையா கைது செய்துவிட்டார்கள்! அந்தோ! என்ன அனியாயம்! மகா பாவியாகிய எனக்கு உதவி செய்ததற்கு இம் மாதிரி ஆபத்தும் அவருக்கு வரலாகுமா! ஈசா! என்று கண்ணீர் வடித்துத் தவித்து உருகுகின்றாள்.

அதே சமயம் இரு போலீஸார் நமது இளஞ் சிங்கம் ராஜ சேகரனை அந்த கோர்ட்டில் கொண்டு வந்தார்கள். கடல் பொங்கு வதுபோலும் காட்டாற்று வெள்ளம் வேகமாக வருவதுபோலும் ஜனத்திறள் எண்ண முடியாது பெரும் வெள்ளமாக வருகிறார்கள். "ஆகா! அக்ரமம். அனியாயம். பந்தாட்ட சூரன் ராஜசேகரனையா கைது செய்வது? இது முற்றிலும் எதிரிகளின் மோச வலையின் வீச்சே யொழிய உத்தமனான ராஜசேகரன் ஒருபோதும் செய் திருக்கமாட்டான். கோர்ட்டார் இந்த அனியாயத்தை ஆராய்ச்சி செய்து கண்டிக்க வேண்டும்" என்று தம் தம் மனம்போனவாறு நீதி ஸ்தலமென்பதையும் மறந்து கூச்சலிட்டார்கள்.

ராஜசேகரனிடம் அத்தனை பெயரும் சென்று "ராஜா! இது ஏதோ பெரிய மோசம். வேண்டுமென்றே அக்ரமக்காரப் பாவி களும் உன் எதிரிகளும் சேர்ந்து இத்தகைய சதியாலோசனைகள் செய்து இம்மாதிரி உன்னைப் பிடித்திருக்கிறார்கள். இதனால் குடியே முழுகிப் போவதா யிருப்பினும்] நாங்கள் சும்மா விருக்கப் போவு

தில்லை. ஒரு கை பார்த்தே தீர்த்துவிடுவோம். இந்த வழக்கில் ராஜசேகரனைச் சம்மந்தப்படுத்தி இருப்பது மிகவும் கொடுமையான காரியம்.'' என்று கூச்சலிடுபவர்களும் ராஜனைக் கட்டித் தடவிக் கொடுப்போரும் மிதமிஞ்சிவிட்டது.

உத்தம சிகாமணியாகிய ராஜசேகரன் களங்கமற்ற சுத்த வீரனாகையினால் அவன் முகம் வாடவில்லை. விசனத்தில் மூழ்கவில்லை. புன்முறுவல் அவனை விட்டு அகலவில்லை. வீரத்துடன் நகைத்துக் "கொண்டே அன்பு மிக்க தோழர்களே! ஆப்த மித்திரர்களே! என் மீது நீங்கள் அளவிலாத வாஞ்சையை—மதிப்பை—ப்ரீதியை வைத்திருப்பதற்கு என் மனம் பொங்கிப் பூரிக்கின்றது. அன்பர்களே! இது நமக்கு ஏதேச்சாதிகாரமான இடமல்ல. இது கட்டுப்பாடுள்ள நீதி ஸ்தலம். ஆகையால் நீங்கள் சற்று பொறுமையோடு அமைதியாக விருங்கள்.

அன்பர்களே! என்னைக் கைது செய்ததைப்பற்றிக் கவலைப் படாதீர்கள். நான் இதற்குச் சந்தோஷமே படுகிறேன். ஏனெனில் என்னைக் கைது செய்ததன்மூலம் பல குற்றங்களை மனந் துணிந்து செய்துள்ள பக்காப் பேர்வழிகளும் கை கூசாது லஞ்சம் வாங்கிக் கொண்டு தாளம் போடும் தம்பிரான்களும் பிடிபடப் போகிறார்கள். நிரபராதிகளைக் கடவுள் விடுதலை செய்துவிடுவார். பயப்படாதீர்கள்.'' என்று தைரியங் கூறிவிட்டுத் தலை நிமிர்ந்து காமுவைப் பார்த்தான்.

ராஜசேகரனின் பொறுமையையும் உதாரண குணத்தையுங் கண்டு ப்ரமித்துக் கண்ணீர் வடித்து நிற்கும் காமு ராஜசேகரனின் புகழையும், கீர்த்தியையும், ஜனங்களின் அன்பைக் கொண்டிருப்பதையும் காணக் காண அவளது இருதயத்தில் சொல்லறியாத வேதனையும் வியப்பும் உண்டாயின. பதுமை போல நின்று அவனையே பார்த்துக் கொண்டிருந்த சமயம் ராஜசேகரன் காமுவைப் பார்த்ததும் காமு தாங்கமாட்டாத விசனத்தினால் "ஹா! அண்ணா! மகா பாவியாகிய எனக்கு ஆபத்தில் உதவி செய்ததன் பலனா உங்களுக்கு இப்படி ஆபத்து வந்தது?'' என்று கதறினாள்.

ராஜசேகரனின் கண்களிலும் மாலை மாலையாகக் கண்ணீர்

பெருகிவிட்டது. எனினும் தைரியத்தைக் கைவிடாமல் "அம்மணி! வருந்தாதே! எல்லாம் நல்லதிற்கென்றே நினைத்துக்கொள்ளு. இந்த சந்தர்ப்பத்திலாவது உன்னைப் பார்க்கும் பாக்யம் கிடைத்ததைப் பற்றிச் சந்தோஷப்படுகிறேன். உன் குழந்தை சௌக்யமா!...... அதோ! பார்த்தேன்...நமக்கும் நல்ல காலம் பிறக்கும்; பிறகு பேசிக் கொள்வோம். இந்த இடம் நமக்குச் சொந்தமல்ல. காமூ! நான் என்னால் கூடிய வரையில் இதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தி ருக்கிறேன். அது பலனையே யளிக்கும் என்று நம்புகிறேன்." என்று கூறி முடிக்குமுன் போலீஸார் தடபுடலான அட்டகாஸத்துடன் அமத்தல் செய்து மிரட்டி வழக்கப்படி தாண்டவம் புரிந்து அங் குள்ள பொது ஜனங்களை எல்லாம் வலுக்கட்டாயமாகத் தள்ளி விரட்டிவிட்டார்கள்.

ராஜசேகரன் எதற்கும் வாயைத் திறக்கவில்லை. வெகு கம்பீர மாகவே நின்றான். அவனைக் கோர்ட்டார் விசாரிக்கையில் அவன் சற்றும் சளைக்காமல் பேசத் தொடங்கி "நான் சொல்வது கடவுள் மீது ஆணையாக முற்றிலும் சத்தியமாகும். ஆனால் இக்காலத்தில் சத்திய மென்பது காத்தாடி போலப் பறந்துவிட்டது.எனினும் சத்திய ரூபனாக விளங்கும் ஆண்டவனுக்கு வெட்ட வெளிச்சமாக யாவும் தெரியும். அவன் எல்லாவற்றையும் கவனித்துக்கொண்டுதா னிருக்கிறான். அவனுக்கும் நீதி பிசகிவிடவில்லை.

இந்த வழக்கின் விஷயம் எனக்கு இன்னும் எள்ளளவும் தெரி யாது. நான் இந்த விஷயத்தில் சம்மந்தப்பட்டதாகப் பொய் ஜோடிப்புடன் என்னைக் கைது செய்துள்ள பெரிய மனிதர்கள் முன் னும் பின்னும் சற்றும் யோசியாமல் தனது உத்யோகத்தின் சிகரம் இன்னும் உயர வேண்டும் என்ற ஓராவலினால் மட்டும் தடபுடலாகச் செய்துவிட்டார் பாவம். அவருடைய அறியாமைக்கு நான் மிகவும் விசனப்படுகிறேன்.

நான் எனது சகாக்களுடன் க்யாம்பு சென்றிருந்த சமயம் என் பாட்டனாருக்கு உடம்பு சரி இல்லை என்று தந்தி வந்ததால் உடனே இரண்டு ஆட்களைத் துணைக்கு யழைத்துக்கொண்டு சென்

றேன். இடை வழியில் இம்மாதின் பரிதாப நிலையைக் கண்டு நான் மனம் சகியாமல் உதவி செய்தேன். அவைகளெல்லாம் இருக்கட்டும்.

கோர்ட்டார் அவர்களே! இந்த பாயின்டை நீங்கள் நன்ருகக் கவனிக்கவேண்டும். போலீஸார், மரண விசாரணை பஞ்சாயத்துக்காரர்கள், பிணத்தைப் பரிசோதித்த வைத்தியர் முதலியவர்கள் கூறிய சாட்சியத்தில் இறந்த அம்மாளின் உயிர் இரவு எட்டு மணி சுமாருக்கு நீங்கிவிட்டதாயும் காலை எட்டு மணிக்கு கவனிக்கும் போது 12 மணி நேரம் ஆய்விட்டதாயும் எழுதி இருப்பது ஞாபகத்திலிருக்கட்டும்.

நான் தனித்து ஓரிடத்திலிருந்தால் என் வார்த்தையில் குற்றமோ, நம்பிக்கையற்ற தன்மையோ காணலாம். நான் எனது சகாக்களுடனும் ஆசிரியர்களுடனும் சென்றிருந்தேன். எனக்கு தந்தி வந்த நேரமும் நான் புறப்பட்ட நேரமும் என்னுடைய ஆசிரியர்களுக்கும் சகாக்களுக்கும் தெரிந்த விஷயமே யாகும்.

நான் புறப்பட்டு வந்த ஊரோ வேறு. அதே இரவில் நான் புறப்பட்டிருக்கிறேன். நான் கால் நடையாக வெகு தூரம் வந்த பிறகே இந்த கோரக் காட்சியைக் கண்டேன். அப்போது நள்ளிரவு நடு நிசிக்கு மேலாகிவிட்டது. நான் இருந்த ஊர் ஒரு மூலை. இந்த கொலை நடந்திருக்கும் ஊர் ஓர் மூலை. இருவரும் சந்தித்த இடமோ ஒரு மூலை. இதிலிருந்து எப்படி காரியம் நடந்திருக்கும், எப்படி ஜோடிப்பு அமைந்திருக்கிறது என்பதைக் கோர்ட்டார் அவர்களுக்கே விட்டுவிடுகிறேன்; யோசிக்கவும்.

நானும் அவர்களோடு கூடவே இருந்ததாயும் இந்தப் பெண்ணைக் கெடுத்தும் கொலைக்கு உடந்தையாயிருந்து கூடவே கொன்றதாயும் பிறகு நான் அகப்பட்டுக்கொள்ளாதிருக்கும் பொருட்டு இந்தப் பெண்ணைக் காப்பாற்றுவது போல நடித்து வீட்டிற்கு அழைத்துச் சென்றதாயும், பிறகு எனக்கே பயமேற்பட்டு இப் பெண்ணை அடித்துத் துரத்திவிட்டதாயும், நான் மட்டும் தப்பித்துக் கொண்டு மறைவாக இருந்ததாயும் அனுதையாசிரமத்தின் தலைவி

யைக் கைவசம் செய்துகொண்டு அங்குள்ள பெண்களைக் கெடுக்கவும் தன்னால் கெட்ட காமுவையும் குழந்தையையும் அங்கு சேர்த்து விட ஏற்பாடு செய்ய அங்கு சென்றதாயும்—இதுபோன்று சிறிதும் ஒவ்வாது—சம்மந்தமில்லாது—விஷயங்களை ஜோடித்து என்னை திடீரென்று கைது செய்திருக்கிறார்கள்.

இதில் இன்னொரு விஷயம். அன்று நான் ஆசிரமத்தில் இருந்த போதே எனக்கு இவ்விஷயங்களை ஒருவன் ஆத்திரத்துடன் கூறி விட்டான். இந்த வார்த்தையைக் கேட்ட உடனே தான் பின்னால் வரப்போகும் இந்த ஜோடிப்புகளையறிந்தேன். நான் தலை மறைவில்லை. இந்த விதமாக வேலை செய்யும் புனிதமூர்த்திகள் யார் என்று கவனித்து வந்தேன். துப்பறியும் வீரசிங்கத்தினிடம் சகல விஷயங்களையும் கூறி இருக்கிறேன். என்னை இவர்கள் பிடித்ததைப்பற்றி நான் சற்றும் வருந்தவில்லை. ஆனால் லஞ்சப் பிசாசின் தாண்டவங்கள் வெளியாவதைக் காணலாம் என்ற சந்தோஷமே படுகிறேன். என் விஷயமாகத் துப்பறியும் ராஜாராம் நாயுடுகாரு தகவல் கொடுக்கும் வரையில் கோர்ட்டாரவர்கள் இந்த வழக்கைத் தள்ளிவைக்க வேண்டுகிறேன்'' என்று தைரியமாயும் அழுத்தந் திருத்தமாயும் சபையோர் வியக்கும்படியும் கூறினான்.

இதற்குள் வெகு நேரமாகிவிட்டது. எதிரே நிற்கும் போலீஸ் இன்ஸ்பெக்டரின் முகத்தில் தீப்பொறி பறக்கின்றது. வழக்கை இன்றே முடிப்பாரோ, ஒத்திவைப்பாரோ என்ற திகில் பிடித்துவிட்டது. அதற்காக அவர் தக்டா புக்டா பேரங்களெல்லாம் செய்து பார்க்கிறார்.

இதற்குள் ராஜசேகரனின் உருக்கமானதும் நீதியானதுமான மொழியைக் கேட்ட அங்குள்ள பலருக்கும் மனம் உருகியது. அவன் எடுத்துக் கூறிய பாயிண்டுகளை ஆழ்ந்து கவனித்துப் பார்த்தால் இந்த கொலையில் அவனை சம்மந்தப்படுத்தி இருப்பது மிகவும் பொருத்தமற்றது என்றதை அவர்கள் உணர்ந்துகொண்டு அவரவர்களுடைய மனம் போனபடிக்குப் பேசிக்கொள்ள வாரம்பித்தார்கள்.

இதற்குள் நேரமாகிவிட்டதால் "இந்த வழக்கை...ம் தேதிக்குத் தள்ளிப்போட்டுவிட்டோம்" என்று நீதிபதி கூறிவிட்டார். உடனே கூட்டங் கலைந்துவிட்டது. காமுவையும் விசாலத்தையும் உடனே போலீஸார் சூழ்ந்துகொண்டு அழைத்துச் சென்றுவிட்டார்கள். ராஜனையும் தனியே அழைத்துச் சென்றார்கள். வழக்கின் முடிவை எதிர்பார்த்திருந்தவர்களுக்கு சப்பென்றாகிவிட்டது. மீண்டும் வழக்கு நடக்கப்போகும் தேதியை எதிர்பார்த்துக்கொண்டிருந் தார்கள்.

* * * *

நமது ராஜசேகரன் திடீரென்று எங்ஙனம் கைதியானன் என்பது பற்றி அறிவோம். அன்றிரவு ராஜசேகரன் ஆசிரமத்தை விட்டுப் புறப்பட்டுக் கண்ணீர் பெருகியவாறு சென்றுவிட்டான். அங்கு வந்த மனிதன் கூறிய விஷயம் அவன் மனத்தை வாட்டி வருத்தியது. தனக்கு இதுவரையில் ஏற்பட்ட துயரங்கள் அவமானங்கள் எல்லாவற்றையும் விட இன்னும் பெரிய பாதாளத்திலும் தன்னை தள்ளக்கூடிய பயங்கரமான விபத்து மறைந்திருப்பதாக மனத்தில் தோன்றிவிட்டது. இதற்குத்தான் என்ன விதமாக முன் ஜாக்ரதை செய்வதென்கிற அபாரமான யோசனையும் பிறந்து விட்டது.

தன் ஆருயிர்க் காதலியின் கடைசீ பார்வையும், அவளுடைய பரிசுத்தமான காதல் நிறைந்த அன்பான தோற்றமும் அவன் மனத்தை யொருபுறம் வாட்டி வதைத்துக் கொல்லுகிறது. காந்தம் இரும்பை இழுப்பதுபோல காதலால் கவரப்பட்டுத் தவிக்கும் நிலைமையில் குறித்த கஷ்டங்களும் சேர்ந்ததும் அவன் அசல் பித்தன் போலாகிவிட்டான். தலைவியின் துயரமும் கூடச்சேர்ந்தது. எல்லா விசனத்துடனும் நடந்து சென்றுகொண்டே இருக்கிறான். தலைவி எப்படி எந்த பக்கம் சென்றாள் என்பதைக் கண்டுபிடிக்க முடியவில்லையாகையால் போய்விட்டான்.

அப்போது அவனுக்கு ஒரு விஷயம் நினைவிற்கு வந்தது. உடனே ரயிலேறிக் குறித்த ஊரை யடைந்தான். நேரே துப்பறியும்

நாயுடுவினிடம் சென்று சகல வரலாறுகளேயும் விவரமாகக் கூறிய தோடு தன் காதலியையும் தலைவியையும் கவனித்துக்கொள்ளவேண்டு மென்றும் பிரார்த்தித்தான். நாயுடுகாருவும் இசைந்து அதற்கு வேண்டிய பல விஷயங்களேயும் தெரிந்துகொண்டு ராஜனுக்குத் தேறுதல்கள் கூறி அவனை "எதற்கும் பயப்படவேண்டாம். ஒருக்கால் உன்னைக் கைது செய்தாலும் தைரியமாக இருந்து வழக்கிற்கு வாய்தா மட்டும் கேளு. நான் மற்ற விவரங்களைப் பார்த்துக்கொள் கிறேன்" என்று கூறினர்.

அன்று முதல் கொண்டே நாயுடு இதைப் பற்றியும் விசாரிக்க வாரம்பித்து ஆசிரமத்தையும் அதன் அதிகாரியையும் நேரில் சென்று பார்த்து தமக்கு வேண்டியளவு விஷயங்களைத் தெரிந்துகொண்ட தோடு தம்முடைய கையாட்களுக்கு சில முக்கியமான விஷயங்களைக் கூறி எச்சரித்துவிட்டார். பிறகு பாரதியை தனித்துக் கண்டு அவளுக்குத் தேறுதல் கூறி அவ்விடத்திலேயே தைரியமாக இருக்கும் படியாகச் சொல்லி "அம்மணி! ஏதோ வம்பு பேசிவிட்டுச் செல்பவன் என்று என்னை எண்ணுதே: நான் என்னாலான வரையில் பிரயத்தனப் பட்டு உன் காதலனின் துயரத்தைப் போக்கி உங்களைச் சேர்த்து வைக்கிறேன்." என்று உறுதியாகக் கூறினர்.

பாரதி:—(கண்ணீர் பெருகியவாறு நாயுடுவை வணங்கி எழுந்து) "ஐயனே! என் சரிதையைக் கேட்டால் பட்ட மரமும் பால் வடிக்கும்; கல்லும் கரையும். (தன்னுடைய சரிதை முற்றும் கூறிவிட்டு) இத் தகைய மகா பாபத்தைச் செய்தவள் நான். மலை போலக் குவிந்து கிடக்கும் விசனத்திற்கு மத்தியில் என்னுடைய ப்ராணநாதரின் முக உல்லாசமான அன்பினால்தான் நான் ஒரு உருவமாக நடமாடுகி றேன். எனக்கு உயிர்ப் பிச்சை யளிக்கவேண்டும். அவரையும் கைது செய்துவிடுவார்களோ வென்று பயமாக இருக்கிறது. அம்மாதிரி இல்லாது பார்த்துக்கொள்ள வேண்டும். எனது அந்தரங்க விஷ யத்தையும் நான் வெட்க மின்றிக் கூறிவிட்டேன்." என்று ஆருத் துயரத்துடன் கூறினள்.

உத்தம நாயுடுகாரு அவளுக்கு மீண்டும் பல விதத்தில் தேறு தல்கள் கூறிவிட்டு விடை பெற்றுக்கொண்டு சென்ருர். இக் காரி

யங்களை எல்லாம் முடித்த பிறகுதான் நாம் முன்பு தெரிவித்தபடி விபரீத கோர சம்பவத்தில் அகப்பட்டுக் கொண்டார். நாயுடுவின் அன்பான ஆறுதல் மொழி பாரதிக்குப் புத்துயிரளித்தார் போலச் சிறிது தெம்பு உண்டாக்கியது எனினும் மனத்தில் வேலை செய்யும் சங்கடத்தைக் கூறவே சாத்தியமில்லை.

அவளுடைய இரு விழிகளிலும் ராஜசேகரனின் உருவமும் தன்னருமைச் சகோதரனின் அழகிய முகமும் மாறி மாறித் தெரிந்து இடைவிடாத வேதனைக் கடலில் ஆழ்த்தின. தன்னுருயிர் சகோதரனைப் பார்க்கவேண்டு மென்கிற ஓர் பித்தம் அவளை யறியாது அவள் இதயத்தில் புகுந்து தாக்குகிறது. கண்ணீர் ஆறுய்ப் பெருக பழங் கதைகளையும் தான் ஒரு காலத்திலிருந்த நிலைமையையும் எண்ணி எண்ணி மனம் வெடித்துவிடும் போலாகிவிட்டது. இரவு முற்றும் நித்திரையே கொள்ளாது புரண்டுத் தவிக்கிருள். தேற்றுவாருண்டா, ஆற்றுவாருண்டா?

இவளுடன் கூட விருக்கும் மாணவிகள் பரிதாபப்பட்டு வருந்தினர்கள். "ஐயோ பாவம்! உடன் பிறந்த அண்ணனின் கதியை நினைத்து அழுவாளா, அல்லது அவனை மறுபடியும் பார்க்கவும் முடியாது போய்விட்டதற்கு வருந்துவாளா? தன் பொருட்டாக அன்பு செலுத்திய தலைவிக்கு நேர்ந்த ஆபத்தை எண்ணி வருந்துவாளா?" என்று பலவிதமாகப் பேசிக்கொண்டார்கள்.

பாரதி தன்னுடைய மனக் கவலையினின்று வேறு வழியில் சற்று நினைவைச் செலுத்தும்பொருட்டு ஒரு தினசரிப் பத்திரிகையை எடுத்துப் படிக்கத் தொடங்கினள். அதில் கொட்டை எழுத்துக்களில் பின் வருமாறு எழுதப்பட்டிருந்தது.

உஷார் ! உஷார் !! உஷார் !!!

கமலகிரியிலுள்ள பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலிருந்து 8 பேர்கள் வேலைக்காரர்களின் அஜாக்ரதையினுல் தப்பியோடிவிட்டார்கள். எத்தனை தேடியும் அவர்கள் அகப்படவில்லை. அவர்க

ளால் வெளியிலுள்ள பொது மக்களுக்கு என்ன ஆபத்து நேருமோ என்று பயப்படுகிறோம். போலீஸாரோ, பொது மக்களோ மேற் குறித்த பயித்தியக்காரர்களைக் கண்டால் உடனே இங்கு தகவல் கொடுக்க வேண்டுகிறோம். அவர்களுடைய பெயர்கள், புகைப் படங்கள் இதோடு காண்க:

சீதாபதி, துரைக்கண்ணு, காமகோடி, மாணிக்கம், வேலு சாமி, பார்ஷியம், மாசிலாமணி, வீராசாமி...

அந்தோ! பரிதாபம். பரிதாபம். மனச் சாந்தி பெறும் பொருட்டு பத்திரிக்கை படிக்கச் சென்று இத்தகைய விபரீத சம்ப வத்தைப் படித்ததும் ஏற்கெனவே துள்ளிக் கொண்டிருந்த பாரதி யின் தலை மீது வானமே இடிந்துவிட்டது போன்ற பெரும் அதிர்ச் சியும், இதயக் கொதிப்பும் அபாரமான துக்கமும் பொங்கிவிட்டன. 'ஹா! அண்ணு!' வென்று வாய் விட்டுக் கதறியவாறு அதில் உள்ள புகைப் படங்களைப் பார்த்தாள்.

என்னவென்றுதான் கூறுவது! ஆஸ்பத்திரிக்குச் சென்ற பிறகு எடுத்த படமாதலால் அவனுடைய முகமே மாறுபட்டுப் பயித்தியக் காரர்களை சொட்ட விழிக்கும் கண்ராவியைப் பார்த்ததும் அவ ளுக்குத் தாங்கவே முடியவில்லை. ஐயோ! "அண்ணு! என்னருமை அண்ணு!" என்று அலறியவாறு பிரக்ஞையே அற்றுச் சவம் போலாகி விட்டாள்.

24-வது அதிகாரம்

மிக மிகத் துயரம்—அகமகிழ்ச் சந்திப்பு

உலகத்தில் மக்கள் நன்ருக விருந்தாலும் சில ருக்குப் பொறுப்பதில்லை. நலங் கெட்டுவிட்டாலும் பொறுப்பதில்லை. அதற்கும் வம்புப் பேச்சும் வயிற் றெரிச்சல் வார்த்தைகளும் தாண்டவ மாடுகின்றன. நலங் கெட்டு

தற்கும் ஐயோ! பாவம். நொந்து போய்விட்டான். கெட்டுவிட்டான். எல்லோரும் வாழ வேண்டுவதே நன்மை......என்று மனம் போனவாறு பேசுவது வழக்கமல்லவா? அதிலும் பொறுமை மிகுந்தோரது மனத்தின் நிலைமையைக் கேட்க வேண்டுமா?

ராஜசேகரன் நாயுடுகாருவைப் பார்த்த பிறகு தனது சினேகிதன் வீட்டிற்குச் சென்றான். அவனிடம் ஏதோ பேசிக்கொண்டிருக்கையில் ராஜசேகரனுடைய தகப்பனாரை அடுத்த ஊரில் மாற்றி இருப்பதாயும் அவர் குடும்பத்துடன் வந்திருப்பதாயும் விஷயத்தையறிந்தான். ராஜசேகரன் ஒரு நாளும் தன் பிதாவிடம் அன்யோன்யமாகப் பழகியது கிடையாதெனினும் ஆதியில் எப்போதாவது சில சமயம் அங்கு சென்றிருந்ததுண்டு.

அதுவும் சில காலமே நடந்தது. அதற்குப் பிறகு தகப்பனாரும் வாவென்று அழைக்கவில்லை. இவனும் செல்லவில்லை. புகைப் படத்தில்தான் தகப்பனாரைப் பார்த்து வந்தானே யன்றி நேரில் முகத்தைப் பார்த்ததில்லை. கடிதப் போக்கு வருத்து மில்லை. இன்று தகப்பனார் சமீபத்தில் இருக்கும் விஷயத்தைக் கேள்வி யுற்றதும் அவனுக்குத் தன்னை யறியாத ஒருவிதமான ஆசையும், புதிய உணர்ச்சியும் தன் தகப்பனாரையும் சிறிய தாயாரையும் குழந்தைகளையும் பார்க்க வேண்டு மென்கிற தடுக்க முடியாத வாஞ்சையும் உண்டாயின.

அப்போது பழய காலத்துக் கதைகள் முற்றும் நினைவிற்கு வந்தன. அந்த உணர்ச்சியினால் சிறிது நேரம் தம்பித்துக் கலங்கி உணர்வற்றவன் போல உட்கார்ந்துவிட்டான். தன் மனத்துடனேயே தான் போராடினான். போவதா, வேண்டாம்? வென்ற ப்ரசினை யதிகரித்தது. எப்படி இருப்பினும் நம்மைப் பெற்ற பிதாவாகையினால் அவர் எப்படி இருந்தாலும் அவரைப் பார்த்துவிட்டுத் தான் வரவேண்டும் என்று தீர்மானித்துவிட்டான்.

தன் பிதாவுக்கு எத்தனை குழந்தைகள் என்பதுவும் இவனுக்குத் தெரியாது. ஆகையினால் எந்த குழந்தைக்கு என்ன வாங்குவது என்று விழித்தான். தான் முன்பு பார்க்கையில் இரு பெண் குழந்

தைகள் மட்டும் தான் இருந்தது நினைவிருந்தது. அவர்கள் இப்போது பெரியவர்களாகி இருக்கக்கூடும். அவர்களுக்குப் பட்டுப் புடவைகள் வாங்கிச் செல்வதென்று தீர்மானித்தான். தன்னோடு பேசிய சினேகிதனையே விசாரிக்கையில் தனக்கு முழு விவரமும் தெரியாது ஏழெட்டுக் குழந்தைகள் என்று கேள்வி என்று தெரிவித்தான்.

பிறகு கடைக்குச் சென்று தின்பண்டங்கள், பழ வகைகள் சொக்காய்கள், சிறிய தாயாருக்குப் புடவைகள் எல்லாம் வாங்கிக் கொண்டு அன்றே புறப்பட்டு இடத்தை விசாரித்துக்கொண்டு அந்த வீட்டிற்குச் சென்றான். மனத்தில் ஆசை யொரு புறம் அடித்துக் கொண்டாலும் பயமும், வெட்கமும் கூடப் பாதிக்காமலில்லை. வீதியில் ஓர் நாய் கட்டி இருந்தது; இவனைப் பார்த்த உடனே குரைக்க வாரம்பித்துவிட்டது.

நாய் குரைப்பதைக் கேட்டு உள்ளிருந்து ஒரு அழகிய பையன் வெளியே வந்து நாயை யடக்கிப் பிடித்துக்கொண்டு "நீ யாரய்யா! யாரைத் தேடிக்கொண்டு வந்தாய்?'' என்று மணி போலக் கேட்டான். இந்த பையனைப் பார்த்த உடனே ராஜசேகரனுக்கு இவன் தனது தம்பிதான் என்று நன்றாகத் தெரிந்துவிட்டது. அவன் வந்து தன்னை யார் என்று கேட்கும்போது துருவ சரித்திரம் இவன் நினைவிற்கு வந்தது. தான் இன்னாரென்று தெரிவிக்காமல் பதில் சொல்ல எண்ணி "அப்பா! உன் தகப்பனார் உள்ளே இருக்கிறாரா; உன் தாயார் இருக்கிறார்களா! அவர்களைத்தான் பார்க்க வந்தேன்.'' என்று கூறினான்.

பையன்:—அவர்கள் உள்ளே இல்லை. இருவரும் ஏதோ காரியமாக வெளியில் சென்றிருக்கிறார்கள். இன்னும் சிறிது நேரத்திற்கெல்லாம் வந்து விடுவார்கள். சற்று இருந்தால் பார்க்கலாம். இப்படி உட்காருங்கள்.

ராஜ:—உள்ளே வந்து உட்காரக்கூடாதா! இங்கேயேதான் உட்கார வேண்டுமோ? இந்த மூட்டைகள் பளுவாக இருக்கின்றன. உள்ளே வைக்கட்டுமா?

பையன்:—ஐயயோ! அது முடியாது. எங்கம்மா வீட்டிலில்லாத சமயம் யார் வந்தாலும் உள்ளே வரக்கூடாது. வீதியிலேயே தான் இருக்க வேண்டுமென்று உத்திரவு. ஆகையால் இங்கேயே இருங்கள். அம்மா வந்தால் அடிப்பாள்.—என்றான். இதற்குள் இன்னும் இரண்டு மூன்று குழந்தைகள் அங்கு வந்தார்கள்.

இந்த வார்த்தையைக் கேட்டதும் ராஜசேகரனுக்கு வியப்பாக விருந்தது. அந்த பையனை நோக்கி "தம்பி! இதென்ன உத்திரவு? எதற்காக அப்படி உத்திரவு போட்டிருக்கிறார்கள். அதற்குக் காரணம் என்ன?

பையன்:—காரணமா! எங்கம்மாளுக்கு மூத்தாள் பிள்ளை—எங்களுக்குப் பங்காளி அண்ணன்—எங்கேயோ இருக்கிறானும். அவன் மகா போக்கிரியாம். சோதாவாம். அவன் ஒரு வேளை வந்து வீட்டில் புகுந்துகொள்ளப் போகிறானே என்ற பயமாம். அதனால் அப்படிச் செய்கிறார்கள்—என்றான்.

இந்த அம்பு பாய்வதைப் போன்ற வர்த்தையைக் கேட்ட உடனே ராஜசேகரனின் இதயம் துடித்தது. அவனுடைய மண்டையில் இடிப்பது போன்ற வேதனை உண்டாகியது. ஆகா! கபடமறியாத குழந்தைகளிடம் நம்மைப்பற்றி அந்த அம்மாள் இப்படிச் சொல்லி இருக்கிறாள் பார்த்தாயா என்ற துக்கம் தொண்டையை அடைத்துக்கொண்டது. அவன் முகமே மாறுபட்டு விட்டது. குழந்தைகளுக்கே இத்தனை தூரம் சொல்லி இருக்கும் மனுஷி நேரில் எப்படி இருப்பாளோ! என்கிற பெருங் குழப்பமும் உண்டாகிவிட்டது. தகப்பனார் என்ன நிலைமையிலிருக்கிறாரோ என்கிற சந்தேகமும் உண்டாகியதால் தான் வந்ததே தெரியாது எழுந்து போய்விடலாமா என்று யோசித்தான். இருப்பினும் தன் தகப்பனாரைப் பார்க்க வேண்டுமென்று திடீரென்று உதித்த ஆசையைத் தட்டக் கூடவில்லை. எது எப்படியாயினும் இருந்துவிட்டே போவதெனத் தீர்மானித்துக் கொண்டான்.

அந்த பையனை நோக்கி "தம்பி! அப்படியா செய்தி? உங்களுடைய அண்ணன் அத்தனை துஷ்டனா! அவன் எங்கே இருக்கி

ளுன். அவனை உங்கப்பா கண்டிப்பதில்லையா! அவனுக்கு யார் சாப்பாடு போடுகிருர்கள்? என்று கேட்டான்.

பையன்:—அப்பாடா! அவனைப்பற்றிக் கூறவேண்டுமா! அவன் மகா போக்கிரியாம். அவனுக்கு காப்பாற்ற மனிதர்களும் வேண்டுமா! அவனைப் போன்ற போக்கிரிகள் எத்தனையோ பேர்கள் இருக்கிருர்களாம். எங்கப்பா அவனைப் பார்ப்பது கூட கிடையாதாம். அவன் இங்கு வருவதே இல்லையாம். நான் பார்த்ததே யில்லை. அவனுக்குப் பாட்டி தாத்தா எல்லோரும் இருந்தார்களாம் அவன் ஏதோ துஷ்டகாரியம் சேய்துவிட்டானும்: என்னமோ சொல்ரு எனக்குத் தெரியவில்லை. அதற்காக அவனை ஜாதியை விட்டுத் தள்ளிவிட்டார்களாம். அவன் பெயரை எடுத்தாலே எங்கப்பாவுக்குக் கடுங் கோபம் வருகிறது. அவன் பந்தாட்டத்தில் மட்டும் எப்படியோ பெயர் வாங்கிவிட்டானும். அவன் புகைப் படங்கள் பத்திரிகையில் வந்தால் அதைப் பார்த்தும் கன்ன பின்ன வென்று திட்டுவார்.

ராஜசேகரனுக்கு ஏற்கெனவே இருந்த வேதனையுடன் இம்மொழிகள் பின்னும் கொன்று வதைத்தன. தான் இங்கு நின்ருல் கட்டாயம் அவமரியாதை யடைவதோடு வீண் சண்டை மனஸ்தாபம் கட்டாயம் உண்டாகி அக்கம் பக்கம் சிரித்துவிடுவார்கள். இப்போதே மரியாதையாக நடந்துவிடுவோம் என்று தீர்மானித்துவிட்டான்.

பையனை நோக்கி "தம்பீ! அவர்கள் வருவதற்கு நேரமாகும் போல விருக்கிறது. என்க்கு வேலை இருக்கிறது. நான் போய்வருகிறேன். இதோ இந்த தின் பண்டங்களை எல்லாம் வாங்கிக்கொண்டு சாப்பிடுங்கள். இந்த சொக்காய்கள் புடவைகள் இவைகளையும் எடுத்துக்கொள்ளுங்கள். அப்பா,அம்மா வந்தால் யாரோ உங்களுக்கு உறவாம் ஒரு பெரியார் வந்திருந்தார். கொடுத்துவிட்டுச் சென்ருர் என்று கூறப்பா. நான் பிறகு வந்து பார்க்கிறேன்.'' என்று கூறி அவைகளைப் பெரியவனிடம் கொடுத்தான். குழந்தைகளை எல்லாம் வாரி முத்தமிட்டு விடை பெற்றுக்கொண்டு சென்றுவிட்டான்.

கண்ணில் நீர் பெருகுகிறது. "ஆசையுடன் தந்தையைப் பார்க்க வந்தும் அது கைகூடாது போய்விட்டதே! பெற்ற பிதா

வுக்கு ஒரு பாபமும் அறியாத நிரபராதியாகிய என்மீது இத்தகைய மனமாற்றமும் கடுங்கோபமும் உண்டாகியது வியப்பிலும் வியப் பன்றோ! ஊம், நமது பாபம் எத்தனே தூரத்திற்குத்தான் இழுத்துச் செல்கிறதோ பார்ப்போம்'' என்று பலவிதமான எண்ணத்துடன் சிறிது தூரம் நடந்தான்.

தூரவிருந்தேனும் தன் தந்தையை கண்ணாரக் காணவேண்டு மென்கிற பேராவல் மனத்தில் தடுக்க முடியாது பொங்கியதால் இவர்கள் வீட்டிற்கு 10 கஜ தூரத்திலிருக்கும் ஓர் மாரியம்மன் கோயிலில் சென்று அம்மனே ப்ரதக்ஷணம் செய்து வணங்கிவிட்டு அங்கேயே நின்றிருந்தான். மாலே நேரம் வெகு ரமணீயமாக பிரகா சித்தது. அந்திச் சூரியனின் அற்புத ஒளி உலகையே கவர்ந்து கொண்டு தன் வயமாக்கிக்கொண்டது. ஜனங்கள் மாரியம்மனே தரிசிக்க வந்துகொண்டே இருந்தார்கள்.

விசனமே வடிவாய் உட்கார்ந்திருக்கும் ராஜசேகரனின் மனம் எண்ணிலடங்காத யோசனே தூரத்திற்குச் சென்று கலங்கிக்கொண் டிருந்தது. அச்சமயம் சலங்கையும் மணியும் கட்டிப் பூட்டப்பட்ட பெரிய வடக்கத்தி எருதுகள் இழுத்த அழகான வில் வண்டி ஒன்று இவன் பிதாவின் வீட்டு வாசலில் நின்றது. அதிலிருந்து முதலில் கையில் (வாக்கிங் ஸ்டிக்கு) கருங்காகாலிப் பிரம்புடனும், தங்கக் கட்டு போட்ட மூக்குக் கண்ணாடியுடனும், காதில் வைரக் கடுக்கன் ஜிலு ஜிலு வென்று ஜொலிக்க ஆஜானு பாகுவாய் அவன் தகப்பனர் இறங்கினர்.

பின்னல் இரண்டு குழந்தைகளும் சிறிய தாயாரும் இறங்கிச் சென்றார்கள். இவர்களே தூரவிருந்து தன்னவல் தீர, கண்ணாரக் கண்டு கண்ணீர் பெருக நின்றான். "அந்தோ! இந்த தகப்பனரின் வயிற்றில் பிறந்து நமது கதி தூர நின்று பார்க்கும்படியாகிவிட் டதே!'' என்று தாங்கமுடியாமல் வருந்தினன். தந்தை உள்ளே போகும் வரையில் அவ்விடத்திலேயே நின்று பார்த்தான்.

பிறகு தன் விதியை எண்ணியபடியே ரயில்வே ஸ்டேஷனே அடைந்து தான் முன்பு புறப்பட்ட ஊருக்கு இரவு வந்து சேர்ந்

தான். சாப்பாடும் பிடிக்கவில்லை. அவன் மனம் நிலையிலடங்காது தவித்தது. தான் என்ன செய்வது எங்கு செல்வது என்றுந் தோன்ருது பித்தன்போலாகிவிட்டான். மூடத்தனத்தினுல் தன்னை ஜாதி ப்ரஷ்டம் போட்ட அக்கிரமத்தையும் சகித்தான். அங்கு பிதா தன் பால் கொண்டுள்ள கெட்ட அபிப்ராயத்தைக் கேட்ட துக்கம்தான் தலை தூக்கி நின்று சித்திரவதை செய்தது.

தனக்கும் பிதாவுக்கும் அதிக நெருக்கம் இல்லை எனினும் பரிபூர்ண பக்ஷமிருப்பதற்குப் பதில் பகையா இருக்கவேண்டும் என்ற துயரம் மிஞ்சியது. சினேகிதனின் அறையில் தனது மாறுதல்கள் தெரியக்கூடாதென்று வெகு சாமர்த்தியமாக நடந்துகொண்டான்.

பல விதமான வருத்தங்கள் கடல் அலைகளைப் போலக் கொந்தளிக்கப் புரண்டுகொண்டே இருந்தான். அவனது இருதயமே வெடித்துவிடும் போல விருந்தது. தனது சினேகிதனே கவலை யற்று நிம்மதியாக அயர்ந்து தூங்குகின்ருன். "வித்தை யுள்ளவனும், விசாரம் பிடித்தவனும், பணம் பெருத்தவனும், பயித்தியக்காரனும் தூங்க மாட்டான்." என்ற பழமொழி அவன் நினைவிற்கு வந்தது.

புத்தகங்களைப் படித்துத் தன் கவலையை மறக்க எண்ணினுன். அதுவும் வீணுயிற்று. பத்திரிகை படிப்பிலும் மனம் செல்லவில்லை. பத்திரிகையைப் பிரித்தால் அங்கு கொலை. இங்கு களவு. பெண்ணை அபகரித்துச் சென்ருன். வறுமையால் குடும்பத்துடன் தற்கொலை செய்து கொண்டார்கள். பூனையின் வயிற்றில் நாய் பிறந்தது. பசுவின் வயிற்றில் யானைக்குட்டி பிறந்தது. தீ விபத்து. பூகம்ப விபத்து. கத்திக் குத்து......அப்பப்ப...இத்தகைய தலையங்கங்களும் விஷயங்களுந்தான் பத்திரிகையை நிரப்பிவிடுகின்றன.

அதுவும் போதாக் குறைக்கு சினிமா விளம்பரமும் சினிமாக் குறிப்புகளும் சினிமாக் காட்சிகளிலுள்ள பல்வேறு படங்களும் இதர விளம்பரங்களும் பத்திரிகையைப் பரிபூர்ணமாக அலங்காரம் செய்துவிடுகின்றன. இதன் மத்தியில் ஆராய்ந்து பார்த்தால் தவிட்டிற்கும் உமிக்கும், கல்லுக்கும் நெல்லுக்கும் மத்தியில் சிறிது அரிசி பொருக்குவது போல உலக சம்மந்தப்பட்ட விஷயங்களும் ராஜீய விஷயங்

களும், சில தினங்களில் ஸ்வாரஸ்யமான சிறு கதைகளும் கிடைக்கின்றன.

இத்தகைய பத்திரிகைகளில் எப்படி இராப் பொழுதைக் கழிக்கவும் மனச் சாந்தி யடையவும் முடியும் என்று ராஜசேகரன் முணுமுணுத்துக்கொண்டு பத்திரிகையை வீசி எறிந்து, விளக்கை யணைத்துவிட்டுச் சற்று உட்கார்ந்திருந்தான். இருக்கை கொள்ள வில்லை. நிலவோ பால்போல ப்ரகாசித்துக்கொண்டு நிச்சப்தமாக ஆட்சி புரிகின்றது.

ராஜசேகரன் அவ்வறையின் ஜன்னலண்டையில் சென்று நின்றுகொண்டு வெளித்தோற்றத்தைக் கவனித்தான். இயற்கை யழகுடன் விளங்கும் மாந்தோப்பும், மரங்களில் காய்கள் குலை குலையாகத் தொங்குவதும், காற்றில் இலைகளும் கிளைகளும் ஆநந்தமாக சல சலவென்று ஆடுவதும் அப்போதுண்டாகும் ஒரு விதமான ஓசையும் மனத்திற்கும் செவிக்கும் சிறிது ரமணீயமாகவிருந்தது எனினும் ஜன நடமாட்டமே இல்லாமையினால் சற்று திக்கு திக்கு என்றும் தோன்றியது.

“நிர்மலமான ஆகாயம் எப்படி துல்லியமாகவும் களங்கமற்றும் இருக்கிறதோ அப்படியே உலகத்தில் சகலமான மக்களின் மனமும் இருக்கக்கூடாதா! என் மனம் மட்டும்தானா கலங்கிக் குழம்பித் தத்தளிக்கவேண்டும்? உம். நான் செய்த வினை...ஆம்...ஆம்...உத்தம சிகாமணி, குற்றமற்ற குணமணி, சிறிதும் களங்கமில்லாத மாசிலாமணியின் குடும்பத்திற்கு நான் எமனாகி ஆகிவிட்டேனல்லவா! அதன் பலனை இவ்விதம் அனுபவித்தேனும் கழிக்கவேண்டாமா!

மகா பாவி நான் அவன் மண்டையை உடைக்காதிருந்தால் அவனுக்கு இத்தகைய ஆபத்து வருமா! அவன் தாயார் தற்கொலை புரிந்துகொள்வாளா! அவன் சகோதரிக்கு இத்தகைய அனாதைத் தனமும் தவிப்பும் உண்டாகுமா? எல்லாவற்றிற்கும் நான்தான் காரணம் என்பதை என் மனச்சாட்சிக்கு மறுக்க முடியுமா! ஒரு நாளும் முடியாது. அந்த விஷயமான கவலை என் மனத்தில் ஒரு புறம் சதா வாட்டி வருத்தி வதைத்துக்கொண்டே இருக்கிறது. என் செய்

வேன். ஈசா! என் கவலைக்கு ஒரு முடிவு கொடுக்கமாட்டாயா! உலக மெல்லாம் நிச்சிந்தையாயுறங்கும் சமயம் நான் ஒரு ஜீவன் இவ்விதம் பெற்ற பிதாவினாலேயே வெறுக்கப்பட்டுத் தவிப்பது அழகா!'' என்று மனமுருகி வேதனைப்பட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தான்.

அச்சமயம் அந்த மாந்தோப்பில் தடதடவென்று யாரோ சிலர் ஓடுவதாகவும் ஏதோ பேசுவதாகவும் அரவங்கேட்டு ராஜன் திடுக்கிட்டான். நடுநிசியில் மாங்காயைக் களவாடிச் செல்லும் கள்வர்களோவென்று பயந்தான். தான் ஒருவனாக எவ்விதம் அந்த தோட்டத்திற்குள் சென்று கள்ளனைப் பிடிக்கக்கூடும் என்று ஒரு விநாடி நேரம் தியங்கினான். அடுத்த நிமிடமே தைரியத்தைக் கைவிடாது துணிவுடன் தனது பந்தாட்டக் கொம்புகளை கையில் எடுத்துக்கொண்டு தன் சிநேகிதனையும் எழுப்பி விஷயத்தைத் தெரிவித்து உதவிக்கு அவனை யழைத்துக்கொண்டு சிறிதும் தயங்காது தோட்டத்திற்குள் ப்ரவேசித்தான்.

இவர்கள் யாரடா அது...அடேய்! அடேய்! என்று கத்திக் கொண்டே கல்லும் கட்டியும் மரமும் கிளையும் தடுக்கி விழுந்தடித்துக்கொண்டு ஓடி ஒரு மனிதனை ராஜசேகரன் பிடித்துக்கொண்டு "அடேய் திருடா! படவாப்பயலே! நில்லு. இல்லையேல் இதோ மடியிலிருக்கும் துப்பாக்கியால் சுட்டு விடுவேன்.'' என்று அதட்டி நிற்க வைத்து தன் மடியி லுள்ள டார்ச்சு விளக்கைப் போட்டுப்பார்த்தான்.

பிடிபட்ட மனிதன் கபகபவென்று சிரித்துக்கொண்டு ராஜனின் முகத்தைத் திருப்பித் திருப்பிப் பார்த்து நகைத்தவாறு அவனைக் கட்டிக்கொண்டான். இச் செய்கை ராஜனுக்கு வெகு ஆச்சரியத்தையும் சந்தேகத்தையும் கொடுத்தது. அந்த மனிதனோ குச்சியாக மெலிந்து எலும்பும் கூடும் போல விருக்கிறான். பார்ப்பதற்குப் பயங்கரமாயும் இருந்தது. அவன் முகத்தையும் செய்கையையும் கண்டு ராஜன் ப்ரமித்து மீண்டும் நன்றாகக் கவனித்துப் பார்க்கையில் அவனைத் தூக்கி வாரிப் போட்டது.

திடுக்கிட்டான். "ஹா!...என் நண்பா!...மாசிலாமணி! ஐயோ! மாசிலாமணியா நீ! அப்பா! நீ இங்கு எப்படி வந்தாய்! ஐயோ·

இதென்ன கண்ராவியடா! என் நண்ப ரத்தினமே. இப்போதுதானே உன்னை நான் எண்ணிப் புலம்பிக் கண்ணீர் வடித்துக்கொண்டிருந் தேன். மாசிலாமணீ! என்னைத் தெரிகிறதா! இதோ பாரு! என் முகத்தைப் பாரு.'' என்று கண்ணீர் பெருகக் கூறியபடியே மாசிலா மணியைக் கட்டியணைத்துக்கொண்டான். தாங்கமாட்டாத துயரத் துடன் புலம்புகிறான். மாசிலாமணியைத் தடவிக் கொடுக்கிறான்.

மாசிலாமணியின் தேகம் விலவிலவென்று நடுங்குகின்றது. வெயர்வை குபீர் குபீர் என்று பொங்குகின்றது. அவன் ராஜனை உற்று நோக்கிய பிறகு ராஜசேகரனா நீ!...உண்மையில் ஒளிக்காது சொல்லு. ராஜசேகரந்தானா!......பயப்படாதே! என் கண்மணி. உன் காதலி—நம்மிருவர்களின் உயிர்நிலையாகிய பாரதி—சௌக்கிய மாக இருக்கிறாளா! உயிருடனிருக்கிறாளா! என் தங்கக் கிளியை நீ அடைந்துகொண்டாயிற்றா! என் செல்வக் களஞ்சியத்தை நான் பார்ப்பேனா!...ராஜசேகரா...ராஜசேகரா!'' என்று வெகு தெளிவாக வும் ராஜசேகரன் ப்ரமிக்கும்படிக்கும் கூறியதைக் கேட்டதும் ராஜ னுக்குண்டான வியப்பிற்கு எல்லையே இல்லை.

மாசிலாமணிக்கு இவ்வளவு தெளிவு ஏற்பட்டிருப்பது கண்டு ஒருபுறம் அடங்காத சந்தோஷத்தை யடைந்தான். "மாசிலாமணீ! உன்னுடைய தெளிவு என்னைப் பூரிக்கச் செய்கிறது. நீ என் இப்படி நடு நிசியில் ஓடிவந்தாய்? உன் சகோதரி சௌக்கியமாக இருக்கிறாள். சதா அண்ணா! அண்ணா! வென்று கதறுகிறாள். பிறகு அதைப்பற்றிப் பேசுவோம். உண்மையில் நீ தெளிவு பெற்றிருக்கிறாயா! விளங்கக் கூறு'' என்று கேட்டான்.

மாசிலாமணியும் சுற்று முற்றும் பார்த்துக்கொண்டு "என் ஆப்த மித்திரா! உன்னை நான் இங்கு கண்டதானது என்னைப் படைத்த கடவுளையே கண்டதுபோல விருக்கிறது. உண்மையில் ஈசனின் கருணையினால் எனக்கு ஒரு மாத காலமாய் படிப்படியாகக் குணமாகிவிட்டது. நான் முற்றிலும் குணம் பெற்றுவிட்டேன். எனினும் என்னை வெளியில் விட சம்மதிக்காது இன்னும் பயித்தி யம்தான் என்று கூறி அடைத்திருந்தார்கள்.

மேலும் என்னை அழைத்துச் செல்ல எனக்கு நாதி ஏது? ஒன்று மில்லாததால் அனுப்ப மறுத்துவிட்டார்கள். சொந்த மனிதர்களோ, முக்கியமானவர்களோ கை யெழுத்திட்டு ஜாமீன் கூறித்தான் அங்கு தெளிந்தவர்களை அழைத்துச்செல்வது வழக்கமாம். நான் என்ன செய்வேன்? உன் விலாசமோ தெரியாது. என் கண்மணியின் விலாசமும் தெரியாது. எனக்கு அங்கு உதவிபுரிவாருமில்லை! என்னுள்ளமோ துடிக்கிறது; தவிக்கிறது. எனக்குத் தெளிவு ஏற்பட்ட பிறகு அரை வினடிகூட அங்கு இருக்க முடியவில்லை. முள்மேல் இருப்பது போலத் தள்ளினேன்.

ராஜா! என்னிலைமையை விவரிக்க முடியாது. அங்குள்ள ஒரு உத்யோகஸ்தனுக்கு யாரோ பொன்னுசாமியாம் அவன் லஞ்சம் கொடுத்து எனக்கு இன்னும் பயித்தியம் இருப்பதாயும் வெளியில் விடவே முடியாது என்றும் கூறும்படியாகச் சொல்லி இருக்கிறுனும். அது எதற்கு என்ருல் என் செல்வக் கிளி பாரதியை அவன் விவாகம் செய்துகொள்ளப்போகிறுனும். நான் நன்ருகத் தெளிந்துவிட்டால் அவனுக்குக் கொடுக்க இசையமாட்டேனும். அதற்காக இந்த சூழ்ச்சி செய்தானும்.

அதோடு இன்னும் விபரீதமான யோசனையும் செய்திருக்கிறுனும். ஒரு டாக்டர் மூலம் உனக்கு மூளை கலங்கிவிடும்படி இஞ்செக்ஷன் கொடுத்து உன்னையும் அங்கு அனுப்பிவிடுவதாம். இல்லையேல் கொலைக் குற்றத்தில் மாட்டச்செய்து தண்டித்துவிடுவதாம். இவ்விரண்டில் ஒன்றைச் செய்துவிட்டால் அவன் மனம் குளிர்ந்துவிடுமாம். அந்தோ! என்ன மோசம். என்ன சதியாலோசனை பார்த்தாயா?

ராஜசேகரா! ஆஸ்பத்திரிக்குள் அடைபட்டுக் கிடக்கும் எனக்கு இந்த விவரம் எவ்விதம் தெரியமுடியும். குமாரசாமி என்ற ஒரு வேலைக்காரன் அங்கு என்னிடம் மிகவும் பக்ஷமாக இருப்பவன். நான் பரிபூர்ணமாகத் தெளிந்துவிட்டதைக் கண்டு அவனுக்கு மிக்க சந்தோஷம். அவனிடம் நான் நமது குடும்ப விஷயங்களைப் பேசிக் கொண்டிருப்பேன். மேற்படி விஷயங்களையும், லஞ்சம் வாங்கிக் கொண்ட ஆளின் யோக்யதையையும் சகலத்தையும் எடுத்துக் கூறியதுடன் எனக்கோர் யோசனையும் கூறினன்.

அதாவது "மறுபடியும் பயித்தியம் திரும்பிவிட்டதுபோலச் சில தினங்கள் வரையில் நடித்து வா. இன்னும் சிலரையும் உன்னேடு சேர்த்து எப்படியாவது வெளியே ஓடிவிடும்படிக்கு நான் செய்து விடுகிறேன். நீ வெளியில் சென்றதும் இந்த உடையை மாற்றிக் கொண்டு உன் சொந்தக்காரர்களிடம் சென்று சகல தகவல்களேயும் கூறிவிட்டு தகுந்த ஏற்பாடு செய்யும்படிக்குக் கூறி விடு. பிறகு நீ அகப்பட்டுக்கொண்டாலும் பயித்தியம் என்ற சாக்கு இருக்கும். இல்லேயேல் சதியாலோசனேயும் லஞ்ச தேவதையின் போக்கும் வெளியாகும்; அதன்மேல் நீ விடுதலேயாகிவிடுவாய்.'' என்று கூறினன்.

நானும் அதேபோல தப்பித்துக்கொண்டு சிலருடன் நள்ளிருளில் ஓடிவிட்டேன். அந்த காவல்காரன் கொடுத்த வேறு உடையை அணிந்துகொண்டு அவன் கொடுத்த பணத்தைக் கையில் வைத்துக் கொண்டு நேரே நடந்தேன். இரவே வாணீபுரத்தையடைய எண்ணினேன். ஆனல் பொழுது விடிந்துவிட்டது. ஆள் நடமாட்டமில்லாத இடத்திலேயே இருந்து இரவு என் வீட்டிற்குச் சென்று யார்போலவோ விசாரித்ததில் சகல செய்தியையும் அறிந்து துடித்தேன். என்னருமைத் தாயார் இறந்த செய்தியையும் அப்போதே கேட்டுத் தவித்தேன்.

பிறகு என் செய்வது? பல பெயர்களே விசாரித்ததில் ஏதோ ஆசிரமத்தில் என் சகோதரி இருப்பதாக அறிந்தேன். மனம் தத்தளித்தது. அங்கு செல்வதென்று உறுதி கொண்டேன். இதற்குள் பைத்தியக்கார ஆஸ்பத்திரியார், போலீஸார் எல்லோரும் எங்களேத் தேடுவதாகச் செய்தியறிந்தேன், ஓடவும் நடக்கவும் சக்தி இல்லே. நான் கிளம்பி இன்று சரியாக எட்டு நாட்களாகிவிட்டன. ஒளிந்து ஒளிந்தே செல்கிறேன். பகிரங்கமாக ரயிலேறிச் செல்ல பயமாக இருக்கிறது......

ராஜா! கடவுள் க்ருபை எப்படி இருக்கிறது பாரு. இந்த தோப்பில் நீ அகப்படப்போகிருய் என்று நான் கனவுகூடக் காணவில்லே. இங்கு யாரோ என்னேத் துரத்துவதுபோலவும் நான் அறிந்தேன். உன்னே முதலில் தெரியாததால் பயித்தியம் போலவே நடித்தேன்

விஷயங்களைக் கூறிவிட்டேன். இனி என்னைக் காப்பாற்றவேண்டியது உன் கடமை...அதோ! யாரோ வரும் சத்தம்போலத் தெரிகிறதே... ...என்று இத்தனை விஷயங்களையும் ஒரு நொடியில் கூறிவிட்டு மிரண்டான்.

இதைக் கேட்ட ராஜனுக்குண்டாகிய வியப்பும் சந்தோஷமும் கூறச் சாத்தியமே இல்லை. அவன் மாசிலாமணியைக் கட்டித் தழுவி "நண்பா! இப்போதே என் மனம் குளிர்ந்தது. என்னிதயம் களித்தது. நான் உன்னை எப்படியாவது என் தலையைக் கொடுத்தேனும் இனி மீட்கிறேன். இது நிச்சயம்...ஆம்...ஆம்...அதோ...யாரோ வரு கிறார்கள். இந்த தோட்டத்து வேலையாட்கள்போலிருக்கிறது" என்றான்.

அதே சமயம் "யாரடா அது மாங்காய் திருடுகிறது...அடேய் ...அடேய்"...என்று கூச்சலிட்டுக்கொண்டு வந்தார்கள். இதற்குள் ராஜசேகரன் "அகப்பட்டானா திருடன்! அகப்பட்டானா"...என்று இவர்களையும் இழுத்துக்கொண்டு ஓடி எதிரே அந்த தோட்டக் காரன்மீது முட்டிக்கொண்டான்.

தோட்டக்காரன் நிதானித்துப் பார்த்ததும் ராஜசேகரனையும் மற்றவர்களையும் யாரய்யா...நீயும் தேட்ரே...என்றான். அதற்கு ராஜன் தந்திரமாக...நான் இதோ தெரிகிறதே அந்த ஜன்னலுள்ள மாடியிலிருப்பவன். இங்கு திருடன் திருடன் என்று கூச்சல் கேட் டதால் தடியும் தாம்புமாக நாங்கள் மூவரும் ஓடிவந்து தோட்டத்தை ஒரு சுற்று வந்தோம், ஒருவனையும் காணவில்லை. தூரத்தில் உங்க ளைக் கண்டு உங்களையே திருடனென்று எண்ணி மண்டையில் இந்த தடியால் போடவிருந்தேன்...நல்ல வேளை" என்று கூறி நகைத்தான்.

தோட்டக்காரனும் "ஐயயோ! நானும் உங்களைத் திருட னென்று எண்ணி இக் கத்தியால் காலில் குத்தவிருந்தேன். கடவுள் தான் காப்பாற்றினார்...என்ன மாயம். இங்கு யாரோ ஓடிவந்ததை நான் பார்த்தேனே...எப்படிப்போயிருப்பான்?" என்று திகைத்துப் பின் இவர்களுக்கே வந்தனம் செய்துவிட்டுப் போய்விட்டான்.

உடனே ராஜனும் ப்ரதி வந்தனம் செய்துவிட்டு சற்றும் தாம திக்காமல் மாசிலாமணியுடன் நேரே தன் சினேகிதனின் விடுதிக்குச் சென்றான். அப்போதே அவனுக்கோர் யோசனை தோன்றியதால் மாசிலாமணிக்கு வேறு உடைகள் அணிவித்து ஆகாரமும் கொடுத் துப் பின் ஒரு வண்டியமர்த்திக்கொண்டு விடியற்காலைக்குள் நாயுடு தங்கியுள்ள இடத்திற்கு மாசிலாமணியை அழைத்துச் சென்று நாயுடுவிடம் காட்டி சகலமான விஷயங்களையும் ஒன்று விடாது கூறி

"நாயுடுகாரு! அந்த கந்தசாமியின் சாட்சியத்தினுல் லஞ்சப்பேயைப் பிடித்து இந்த ஏழையைக் காப்பாற்றவேண்டும். எல்லாப் பொறுப்பும் தங்களுடையதே! தாங்கள்தான் காக்கவேண்டும்'' என்று வெகு தாழ்மையுடன் ப்ரார்த்தித்தான்.

நாயுடு.—ராஜசேகரா! பயப்படாதே. உன் காதலியை நேரில் கண்டு தேறுதல் கூறிவிட்டு வந்தேன். நீ எதற்கும் சிறிதும் பயப்பட வேண்டாம். கடவுளை நம்பி இரு. நானும் ஒரு விநாடிகூட வெறு மனே இல்லை. ஆராய்ச்சி செய்து கண்டு பிடித்துக்கொண்டே இருக்கிறேன். அனேகமாக விளங்கிவிட்டது என்றே கூறலாம். மாசிலாமணி இந்த இடத்திலேயே இருக்கட்டும். நான் மேற்கொண்டு யோசித்துச் செய்கிறேன். மாசிலாமணி பயப்படாதே! உன் சகோதரியை உனக்குக் காட்டுகிறேன். நான் சொல்கிறபடியே காரியம் ஆகும்வரையில் நீ கேட்கவேண்டும்.

மாசிலா.—தங்கள் கட்டளைப்படியே நடக்கிறேன். நான் தங்களுடைய அடிமை. என் சகோதரியைச் சௌக்கியமாகப் பார்த்துவிட்டேனுல் அதுவே போதும். மற்ற பாரம் உங்களுடையது—என்றுன்.

182978

ராஜசேகரன் மாசிலாமணியிடமும் நாயுடுவிடமும் சொல்லிக்கொண்டு தன் நண்பனேடு மீண்டும் பழய இடத்திற்கு வந்து சேர்ந்தான். இந்த சந்தோஷச் செய்தியை பாரதிக்கு எழுதவேண்டுமென்று ஆவல் அதிகரித்தது. எனினும் அந்த விஷயம் வெளியிடக்கூடாதென்ற நாயுடுவின் உத்திரவு நினைவிற்கு வந்ததால் பேசாதிருந்துவிட்டான். அன்று கவலையால் கண் விழித்ததும் ஒரு நன்மைக்கே யாகியதுபற்றிச் சந்தோஷப்பட்டான்.

பிறகு இரண்டு தினத்திற்கெல்லாம் நாம் முன்னர் தெரிவித்தபடி திடீரென்று ராஜனை கொலைக்குற்றத்திற்காகக் கைதியாக்கியதும் விசாரித்து வழக்கு ஒத்திப்போட்டதும் நடைபெற்றன. சிறைச்சாலையில் தத்தளித்துக்கொண்டு உட்கார்ந்திருக்கையில் ராஜனுக்கு ஒரு கடிதம் வந்தது. அதன் மேலட்டையைப் பார்த்த உடனே அவன் மனம் பூரித்தது. தன் காதலியின் கடிதமென்பதை யறிந்து அளவற்ற சந்தோஷத்துடன் அதைப் பிரித்துப் படிக்கத் தொடங்கினுன்.

அச்சமயம் ஜெயில் விசிட்டர்கள் (பார்வையிடுகிறவர்கள்) சிலர் அங்கு வந்தார்கள். அவர்களில் தன் பிதாவும் ஒருவராக இருப்பதை ராஜசேகரன் பார்த்ததும் தன்னையறியாது தேகமே நடுநடுங்கிப் ப்ரமித்துப்போய் செய்வதறியாது குன்றி உட்கார்ந்துவிட்டான்.

PRINTED AT TATA PRESS, & PUBLISHED BY V. M. PARTHASARATHY, MADRAS

சுகுணபூஷணம்

அல்லது

அற்ப புத்தியின் அவதி

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள்

எழுதிய

துப்பறியும் நாவல்.

அற்ப புத்தி ஆபத்தில் புகுத்தும்
ஐயப்பாடு அவதியுறச் செய்யும்
பொறுமை என்றும் பெருமையளிக்கும்
பக்ஷபாதம் பழிக்கச் செய்யும்
உண்மைக் காதலே நன்மை பயக்கும்
உத்தம நெறியே உயர் பெற்றோங்கும்.

இத்தனை அருமையான விஷயங்கள் அடங்கிய புத்தகம்
விலை அணா நான்கே.

புதுமைக் கவி பாரதியார்

எழுதிய நூல்கள்

தத்துவம்

பாரதியார் 1910- வருஷத்திலிருந்து 1920-ம் வருஷம் வரை தமிழ் பத்திரிகைகளில், எழுதிய கட்டுரைகளைச் சேர்த்து புஸ்தக ரூபத்தில் வெளியிடப்படும் தொகுதியில் முதலாவது. தமிழுக்கும் தமிழருக்கும் புத்துயிர் அளித்த நமது தேசியக் கவியின் பேரறிவு, அபூர்வக் கருத்துகள், விசேஷ அனுபவங்கள் முதலியவை நிறைந்த இருபத்துமூன்று கட்டுரைகள் அடங்கியது. விலை அணா 10.

தபால் செலவு இரண்டணா.

கவிதைகள் (12 பிரிவுகள் சேர்ந்தது) 2—8—0

வசனங்கள் (ஆறு பிரிவுகள் சேர்ந்தது) 2—0—0

பகவத்கீதை

நாகர அட்சரத்தின் மூலமும் பாரதியாரின் தமிழ் உரையும்,
காலிகோ பைண்டு அணா 12
ராப்பர் பைண்டு அணா 8

"ஜகன்மோகினி" ஆபீஸ்,

26, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி சென்னை.

போலி மருந்துகளைப் பற்றி எச்சரிக்கையாக இருங்கள் !!!

அமிர்தாஞ்சனம்

நாற்பது வருஷங்களுக்கு மேலாக முன்னணியில் நிற்கின்றது.

மற்றவைகள் இதைப் பின்பற்றித்தான் வருகின்றன.

லக்ஷக் கணக்கில் செலவாகின்றது

எல்லா இடங்களிலும் விற்கப்படும்.

அமிர்தாஞ்சன் டிபோ,

சென்னை கல்கத்தா

பம்பாய்.